இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

1014

மாதமிரு இதழ் — 426 ● 1992 நவம்பர் 20 வெள்ளிக்கிழமை

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம். 24 MAR 1993 இனாமாகப் பெற்றது

Nallur Branch Library

உள்ளே:

★ தாதிகள் சங்கத் தலைவரின் ஆள்பிடி வேலை, பக்கம் — 2

★ தோழர் பிட்டவெல நினைவு நீடூழி வாழ்க், பக்கம் — 2

★ கனடாவின் கருத்துக் கணிப்பு. பக்கம் — 3

★ முதலாளித்துவப் பாதையில் செல்ல சீன ஸ்டாலினிஸ்டுகள் முடிவு பக்கம் — 3

★ இலவசக் கல்வியை காப்பது எப்படி? பு. க. க, செயலாளர் பேச்சு பக்கம் 4—5

# 1993 யூ.என்.பி. வரவு செலவுத்திட்டம்: மிலேச்ச தாக்குதலின் புதிய ஆரம்பம்

இலங்கைப் பொருளாதாரம் 'இப்போது உறுதியான அடித்தளத்தில்' நின்று கொண்டிருப்பதாகக் கூறி யூ. என். பி, நிதி அமைச்சர் டீ, பி. விஜேதுங்க நவம்பர் 6ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டம் ஏகாதிபத்தியவாதிகளதும், ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளதும் பகற்கொள்ளைக்கான திட்டங்களை அம்பலப்படுத்தியுள்ளது,

ஏகாதிபத்தியவாதிகளும், ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் செல்வங்களையும் சலுகைகளையும் கொள்ளையடிக்கும் புதுப்புது யோசனைகள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேசமயம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் தொழில், சேவை நிலைமைகள், வாழ்க்கைத் தரம், சேமநல சேவைகளை நாசமாக்கும் திட்டங்கள் பல இதில் மேலும் சேர்க்கப்பட்டுள்ளது. தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பலியெடுக்கும் 'யுத்தக் கைத்தொழில்' முக்கிய வளர்ச்சி காண்கின்றது.

பிரேமதாச அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து (1988) அரசாங்கத்தின் செலவினங்களும் வரவு-செலவுத் திட்டப் பற்றாக் குறையும் பெருமளவில் வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் வாயடித்துள்ளார். 1988ல் மொத்த தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 36 வீதமாக இருந்த அரசாங்க செலவினங்கள் 1992ல் நூற்றுக்கு 29 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 1988ல் மொ. தே. உ,ன் 15வீதமாக இருந்த வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறை 1992ல் 10 வீதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செலவின வெட்டுக்கள் பிரேமதாச அரசாங்கத்தின் மாபெரும் பொருளாதார அபிவிருத்தியினால் ஏற்பட்டவை அல்ல. மாறாக ஏகாதிபத்திய உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளையின் பேரில் இந்த செலவின வெட்டுக்கள் அமுல் செய்யப்பட்டுள்ளது, இந்தச் செலவுகளுடன் பிணைக்கப்பட்டிருந்த தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் தொழில்களும், சேவை நிலைமைகளும், சேமநல சேவைகளும் வெட்டப்பட்டதன் மூலம் அவர்கள் அழிவினுள் தள்ளப்பட்டுள்ளனர்,

இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்துக்கும் அரசாங்கம் பாய்ச்சி வந்த பணத்தை நிறுத்தியதன் மூலமே இந்த செலவினக் குறைப்பு சாத்தியமானதாக நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் அரசாங்கம் 1200 கோடி ரூபாக்களை மிச்சம் பிடித்துள்ளதாக நிதி அமைச்சர் கூறிக்கொண்டுள்ள போதிலும் உண்மையில் இந்த நிதிக் கொள்ளையின் பின்னர் யூ. என். பி, அரசாங்கம் தோட்டத்துறையை தனிப்பட்ட முதலாளிகளிடம் கையளித்துள்ளது,

முழு நாட்டையும் ஒரு சுதந்திர வர்த்தக வலயமாகப் பிரகடனம் செய்து கொண்டுள்ள அரசாங்கம் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் வெளிநாட்டில் இருந்து எந்தளவு பணத்தையும் நாட்டினுள் எடுத்துவரக் கதவுகளை அகலத் திறந்துள்ளது. கமிஷன், கழிவு, புறோக்கர் கட்டணம் என்ற பாணியில் பொதி கட்டி நாட்டிற்கு வெளியே எடுத்துச் சென்ற பணத்தை எதுவித கேள்வியுமின்றி நாட்டினுள் இறக்குவதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது,

## உறிஞ்சுபவர்கள்

நாட்டின் செல்வத்தில் மாபெரும் பங்கினை உறிஞ்சிக் குடிப்பவர்கள் ஏகாதிபத்திய வங்கியாளர்களே, இந்நிலைமை விஜேதுங்கவின் 1993 வரவு - செலவுத் திட்டத்தில் மேலும் உக்கிரம் கண்டுள்ளது, 1990ல் 17688 கோடி ரூபாக்களாக இருந்த வெளிநாட்டுக் கடன் 1992 ஜூனில் 21941 கோடியாக அதிகரித்துள்ளது, வெளிநாட்டுக் கடனும் வட்டியும் திருப்பிச் செலுத்துதல் (1990) 858 கோடி ரூபாக்களில் இருந்து (1992) 899 கோடி ரூபாக்களாக உயர்ந்துள்ளது. அடுத்த ஆண்டில் மேலும் 2400 கோடி ரூபாக்களை அரசாங்கம் கடன் பெறப்போகின்றது

கடந்த ஆண்டில் 4118 கோடி ரூபாக்களாக இருந்த வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக்குறை இவ்வாண்டு ரூபா. 4448 கோடியை எட்டும் என வரவு செலவுத்திட்டம் சணக்கிட்டுக் கொண்டுள்ளது. இந்த இலட்சணத்தில் இந்த பற்றாக் குறையை அடைக்கவும் 554 கோடி ரூபாக்கள் உபரி ஈட்டவும் போவதாக விஜேதுங்க குறிப்பிட்டுள்ளார். ஏகாதிபத்திய கடன்களைக் கொண்டு ஈட்டிக்கொள்ளப் போகும் இந்த 'உபரி' பேச்சுக்கள் பொது மக்களின் கண்களில் மண் தூவும் மற்றுமோர் சதி,

இலவசக் கல்வி, சௌக்கிய சேவைகளில் எஞ்சியுள்ளவற்றுக்கு செலவிடவென யூ. என். பி. அரசாங்கம் மொத்தமாக 1500 கோடி ரூபாக்களை மட்டுமே ஒதுக்கியுள்ளது. ஆனால் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான படுகொலை யுத்தச் செலவினத்தை 1805 கோடிக்கு உயர்த்தியுள்ளது. இத் தொகையும் கூட 'பற்றாக்குறையானது' என்று பிரதமரும், நிதி அமைச்சருமான விஜேதுங்க கூறியுள்ளார். இதன் மூலம் யூ. என், பி, அரசாங்கம் நாடு பூராவும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இராணுவ—பாசிச சர்வாதிகாரத்துக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்து வருகின்றது.

இந்நிலைமையில் துரோக சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ தலைமைகள் 'அரசாங்கம் தேர்தல் வரவு-செலவுத்திட்டத்தை' முன் வைத்துள்ளதாகக் கூறும் விஷமத்தனமான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னரும் பின்னரும் பாண் உட்பட சகலஅத்தியாவசிய பொருட்களும் விலை அதிகரித்துள்ள நிலைமையில் யூ. என். பி. அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ந்து வரும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை' தேர்தல் மோசடி' மூலம் வழிதடுமாறச் செய்ய இத்துரோகத் தலைவர்கள் முயற்சிக்கிறார்கள்.

## சோசலிச வேலைத் திட்டம்

ஏகாதிபத்தியக் கடன்களைத் திரும்பிச் செலுத்துவதை பகிஷ்கரித்தல். வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகத்தை நிலைநாட்டல், சகல ஏகாதிபத்திய, முதலாளித்துவ கைத்தொழில்கள் — நிறுவனங்களை நஷ்டஈடின்றி தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமாக்கல் உட்பட சோசலிச வேலைத் திட்டத்துக்கான போராட்டத்தின் அவசியம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

தமிழ் ஈழம்—இலங்கை பிரதேசங்களில் வாழும் தொழிலாளி வர்க்கம் தம்மைச் சூழ ஒடுக்கப்படும் மக்கட் பகுதியினை அணிதிரட்டி உலகத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவுடன் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராட வேண்டும்.

இதன் மூலமே தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்தை நிறுத்தவும் வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறவும், தோட்டத் தொழிலாளரின் குடியுரிமையை உறுதி செய்யவும், கிராமப்புற படுகொலைகளை நிறுத்தவும் முடியும், இந்தப் புரட்சிகர முன்நோக்கு, வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே போராடுகின்றது.

## ஆசிரியர்—மாணவர் பெற்றோர் மாநாடு



பு. க. க. செயலாளர்

விஜே டயசின்

அரசியல் அறிக்கை

பக்கம் 4 — 5

## ஹெலன் ஹெல்யாட்டின் உலகச் சுற்றுலா



பக்கம் 7—8

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

# தாதிகள் சங்கத் தலைவரின் பொலிஸ் ஆள்பிடி வேலை

அரசாங்க சேவை ஐக்கிய தாதிகள் சங்க மகாநாட்டில் ஊழியர்களின் உரிமைகள் பற்றிப் பேச எழுந்த அங்கத்தவர்களைப் பொலிசாரிடம் பிடித்துக் கொடுத்த சம்பவம் அக்டோபர் 28ம் திகதி இடம்பெற்றுள்ளது. தாதிகளின் சேவை உரிமைளுக்காகப் போராடி வரும் மூன்று போராளிகளை 'பொலிஸ் விரும்பியதைச் செய்யுங்கள்' என பொலிசாரிடம் பிடித்துக் கொடுத்தவர் இந்த அ. சே. ஐ. தாதிகள் சங்கத் தலைவரும் யூ. என். பி. அரசாங்கத்தின் அப்பட்டமான கைக்கூலியுமான முருத்தெட்டுவே ஆனந்த என்ற பிக்கு ஆவார்.

தாதிகள் சேவைச் சங்க தலைவர்களின் இந்த ஆள் பிடி வேலையை வன்மையாகக் கண்டனம் செய்யும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தாதிகள் சேவைச் சங்க அங்கத்தவர்களையும் தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பிரிவினரையும் வேண்டுகின்றது.

இந்த வலதுசாரி கைக்கூலி பிக்குவினால் இங்ஙனம் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர் அஜித் குணரத்னவும் ஆதரவாளரான மங்கள ஜயசிங்கவும், லால் குணரத்னவும் ஆவர். அஜித் குணரத்னவும், மங்கள ஜயசிங்கவும் யூ. என். பி. அரசாங்கத்தினதும், தாதிகள் சங்கத் தலைமையினதும் கடைகெட்ட ஒடுக்குமுறைகளுக்கு எதிராக பயிற்சிபெறும் தாதிமார்களின் உரிமைக்காகப் போராடி வரும் புதிய தாதிமார் ஊழியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னர் உரிமைகளுக்காகப் போராடி அவற்றை வென்றெடுத்தாலும் இன்று அங்ஙனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என இத்தாதிமார் சங்கத் தலைவர் கூறி வருகின்றார், இதன் மூலம் தான் ஜனாதிபதி பிரேமதாசவைக் காட்டிலும் மோசமான பிற்போக்காளர் என்பதை நிரூபிக்க இத் தேரோ முயன்றாரர் எனவும் தோன்றுகின்றது. ''சிலர் நான் பிரேமதாசவுடன் ஒட்டிக்கொண்டுள்ளதாகக் கூறுகின்றார்கள். ஆனால் பிரேமதாச தான் என்னுடன் ஒட்டிக் கொண்டுள்ளார். இதுதான் நடந்துள்ளது'' என இந்த முத்தெட்டுவ ஆனந்த தேரோ கூறியுள்ளார். பிரேமதாசவின் ஆலோசனையின்படி கட்டப்பட்டுவரும் தாதிமார் சங்க கட்டடத்துக்கென சகல சங்க உறுப்பினர்களிடம் இருந்தும் சம்பளத்தில் மாதாந்தம் ரூ. 100/-ஐ வெட்டிக் கொள்ள இவர் நடவடிக்கை எடுத்துள்ளார். இந்தத் திட்டத்துக்கு 10000 அங்கத்தவர்களைக் கொண்ட சங்கத்தில் 4000 பேரே இணக்கம் தெரிவித்துள்ளனர். அங்கத்தவர்களுக்கு சங்கம் உதவிபுரிவது தமது இந்த புதிய வியாபாரத்துக்கு அவர்கள் உதவியுள்ளார்களா இல்லையா என்பதைக் கணக்கில் கொண்டுதான் எனவும் இவர் தெரிவித்துள்ளார்.

முதலாளித்துவ அரசின் ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் ஆதரவளிக்கும் விதத்தில் பேசிவரும் இத்தொழிற் சங்கத் தலைவர் அங்கத்தவர்களை மிரட்டும் வகையில் கூறியதாவது: ''இன்று நாம் எமது பொருளாதார கோரிக்கைகளுக்கு அன்றி தொழில் நிலைமையை உயர்த்தவே முதலிடம் தரவேண்டும். ஆதலால் நாம் சம்பளம் இல்லாமலேனும் சேவை செய்ய வேண்டும். இந்தத் தொழிலை 'நாசமாக்கும்' விதத்தில் வேலை செய்யும் ஆட்களுக்கு நான் இடமளிக்க மாட்டேன். நான் இன்று ஆஸ்பத்திரியில் பணிப்பாளருடன் சேர்ந்து தாதிகள் வேலை செய்யும் விதத்தைப் பார்வையிடச் செல்கின்றேன். தவறு செய்வோருக்கு தண்டனை வழங்குவோம். நான் ஏற்கனவே பலருக்குத் தண்டனை வழங்கியுள்ளேன், தவறு செய்து விட்டு எனக்கு அருகே வர வேண்டாம்''. என்ற பாணியில் இந்த நாறிப்போன தொழிற்சங்கவாதி பிக்கு பேசியுள்ளார்.

முதலாளித்துவ அரசாங்கத்துடன் சேர்ந்து தாதிகளின் சேவை உரிமைகளுக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்து வரும் இப்பிற்போக்குத் தொழிற்சங்கத் தலைவர்களின் நடவடிக்கைகளைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'கம்கறு மாவத்த', 'தொழிலாளர் பாதை'பத்திரிகைகளும் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்துள்ளன. இதனால் இப்பிற்போக்குத்தலைமையின் முழுக் குரோதமும் இப்புரட்சிகர காரியாளர்களுக்கும் கட்சிக்கும் எதிராகத் திரும்பியுள்ளது.

போராளிகளைப் பொலிசாரிடம் பிடித்துக் கொடுத்து விட்டு மகாநாட்டைத் தொடர்ந்த சங்கத் தலைவர் அங்கத்தவர்கள் எழுப்பிய பல கேள்விகளை மழுப்பியுள்ளார். சுகாதார சேவைகள் உட்பட சகல இலவச சேவைகளையும் ஒழித்துக்கட்ட யூ. என். பி. அரசாங்கம் நடாத்திவரும் தாக்குதல்களின் இணைந்த பாகமாகவே இந்தப் பிற்போக்குத் தலைமைகளின் போராளிகளுக்கு எதிரான வேட்டை விளங்குகின்றது.


# தோழர். பிட்டவெலவின் நினைவு நீடூழி வாழ்க!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும், இலங்கை ஆசிரியர் சங்கத்தினதும் முன்னணி உறுப்பினரான தோழர். ஆர். ஏ. பிட்டவெல ஜே. வீ. பி, பாசிஸ்டுகளால் படுகொடூரமாகக் கொலைசெய்யப்பட்டு 1992 நவம்பர் 12ம் திகதியுடன் நான்கு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது, இலங்கை ஆசிரியர் சங்கத்துள்ளும், தோழர், பிட்டவெல தொழிற்பட்ட ஊவா பிராந்தியத்திலும் பரந்தளவிலான இளந் தலைமுறையினர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பாட்டாளி வர்க்க சோசலிசத்துக்கான போராட்டத்தின் பக்கம் இன்று ஈர்க்கப்பட்டுள்ளமை தோழரின் வாழ்க்கை இலட்சியத்துக்கு-புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்பும் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'தொழிலாளர் பாதை'யும் இந்த ட்ரொட்ஸ்கிச போராளிக்கு புரட்சிகர அஞ்சலி செலுத்துகின்றன.

1988 நவம்பர் 12ம் திகதி இரவு 7மணிக்கு பிட்டவெலவின் வீட்டினுள் பாய்ந்து விழுந்த சுமார் 10 ஜே. வீ. பி. கொலைகாரர்கள் தோழரின் மனைவியையும், குழந்தைகளையும் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என மிரட்டினர். வழிகாட்டும்படி பிட்டவெலவை வெளியே அழைத்துச் சென்ற கொலைகாரர்கள் ஒரு மைலுக்கு அப்பால் வைத்து தலையில் சுட்டுக்கொன்றதோடு, சடலத்தை மின்கம்பத்தில் தொங்கவிட்டனர்.

முப்பத்தாறு வயது நிரம்பியவரும் மூன்று குழந்தைகளின் தந்தையுமான தோழர்.



ஆர். ஏ. பிட்டவெல

பிட்டவெல தொடர்பாக இந்த பாசிச கும்பல் தமது முழு வெறுப்பையும் காட்டிக் கொண்டது. தமிழ் தேசிய இனத்தினரின் விடுதலைப் போராட்டம்தொடர்பாகவும் அவ்வாறே தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமாகவும் தோழர். பிட்டவெல உறுதியான பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தார். சிங்களக் கிராமப்புற ஏழைகளை தோட்டத் தொழிலாளருக்கு எதிராகத் தூண்டிவிடும் ஜே. வீ. பி, சோவினிச வேலைத் திட்டத்துக்கு எதிராகத் தோழர். பிட்டவெல நிலமற்ற (சிங்கள) ஏழைகளை சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கப் புரட்சிகர வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடினார்.

தமிழ்—சிங்கள தேசிய இனங்கள் இரண்டினையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் மேல் முதலாளித்துவ ஒற்றையாட்சி முறையைத் திணிக்கும் யூ. என். பி. இனவாத யுத்தத்துக்கு ஆதரவு தரும் சமசமாஜ—கம்யூனிச —நவசமசமாஜ கட்சிகளின் துரோகங்களுக்கு எதிராக பிட்டவெல தாம் அங்கம் வகித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தினுள் தமிழ் தேசிய இனத்தினரின் சுயநிர்ணய உரிமைக்காக முன்னெடுத்த போராட்டம் முக்கியமானது. தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனப்படுகொலை யுத்தத்தின் ஆரம்பமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் கொணரப்பட்ட வேளையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதற்கு எதிராக உறுதியான போராட்டத்தினை முன்னெடுத்தது, சிங்கள சோவினிசத்துக்கும் மற்றும் சீர்திருத்தவாத மத்தியவாத போக்குகளுக்கும் எதிராக பு. க. க. நடாத்திய ஈவிரக்கமற்ற போராட்டம் காரணமாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 1978 ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான பிரேரணை நிறைவேறியது. சங்கத்தின் இந்த நிலைப்பாடு தொடர்பாக எச், என். பெர்னாந்து தலைமையின் ஈடாட்டங்களை எதிர்த்து தோழர். பிட்டவெல 1980 பதுகளில் உறுதியாகப் போராடினார்,

1974ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்த தோழர். பிட்டவெல அவரின் புரட்சிகர ட்ரொட்ஸ்கிச அரசியல் முன்னோக்குக் காரணமாக ஊவா பிராந்தியத்தில் தோட்டத் தொழிலாளர்களிடையேயும் கிராமப்புற ஏழைகளிடையிலும் புகழ் பெற்றிருந்தார். 14 ஆண்டுகளுக்கு மேலாக அவரின் அரசியல் போராட்டமானது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலைமையில் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்புவதாக விளங்கியது. ஏகாதிபத்தியத்தின் புதிய மரண நெருக்கடி நிலைமையுள் அவரின் இலட்சியத்தினை முன்னெடுக்க நாம் உறுதி பூணுவோமாக.

★ தோழர் பிட்டவெலவின் நினைவு நீடூழி வாழ்க!

## தொழிலாளர் பாதை
### சந்தாதாரர் ஆகுங்கள்

அஞ்சல் கட்டணம் உட்பட ''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 7/- 3 மாதம் — ரூபா 27/-
6 மாதம் — ரூபா 45/- 1 வருடம் — ரூபா 90/-

பெயர்:.. ..........................................


முகவரி:..............................................

சந்தாக் காலம்:........ ரூபா........ சதம்........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''
இல—90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10.

# கனடிய கருத்துக்கணிப்பு தேசியவாதத்துக்கும் சோவினிசத்துக்கும் தூபம்

கனடாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்மீது அக்டோபர் 26ம் திகதி நடைபெற்ற கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பானது தேசியவாதத்துக்கும், சோவினிசத்துக்கும் தூபமிடும் நடவடிக்கையாக விளங்கியது, குவிபெக்கை கனடாவில் இருந்து பிரித்து வட அமெரிக்காவில் ஒரு மூன்றாவது ஏகாதிபத்திய அரசினை நிறுவும் நோக்கத்துடன் இக்கருத்துக் கணிப்பு இடம் பெற்றது. கனடிய ட்ரொட்ஸ்கிசக் கட்சியான அனைத்துலகத் தொழிலாளர் கட்சி (I,W,P) இப்பிரிவினையை எதிர்த்து வாக்களிக்கும்படி தொழிலாளர்களை வேண்டிக் கொண்டது,


The International
For a Socialist Alternative to Capitalist Slump and War:
Fight for a Workers' Government
Editorial: The International: A Weapon for the Working Class

கனடிய ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் இரு மொழிப் பத்திரிகை.

இக்கருத்துக் கணிப்புத் தொடர்பாக அ. தொ. க. வெளியிட்ட அறிக்கை கூறுவதாவது; ''நாம் இந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களைத் தோற்கடிக்கப் போராடுகின்றோம். முதலாளி வர்க்கமோ அல்லது அதன் எந்தவொரு பிரிவோ அதன் ஆட்சியை மறுசீரமைக்கவும் உறுதிப்படுத்தவும் செய்யும் அனைத்து முயற்சிகளையும் நாம் எதிர்க்கின்றோம். தொழிலாளி வர்க்கம் ஒரு சுயாதீனமான வர்க்கமாகச் செயற்படக் கற்றுக் கொள்ளும் போது மட்டுமே அதனால் சமூக நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தொழிலாளி வர்க்கத்துக்கு அவசியப்படும் தீர்வினை முன்வைக்க முடியும். எனவே கனடாவில் இருந்து குவிபெக்கை பிரித்து வட அமெரிக்கக் கண்டத்தில் ஒரு மூன்றாவது ஏகாதிபத்திய அரசினை அமைக்க இடம் பெறும் இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் தொழிலாளர்களை 'வேண்டாம்' என வாக்களிக்கும்படி அ. தொ. க. வேண்டுகின்றது.''

இக்கருத்துக் கணிப்பில் குவிபெக்கிலும், கனடாவின் ஏனைய பாகத்திலும் பிரிவினை வேண்டாம் என வாக்களிக்கும்படி பிரச்சாரம் செய்துவரும் தீவிரவாத குவிபெக்கியர்களையும், ஆங்கிலோ சோவினிஸ்டுகளையும் பற்றி தொழிலாளர்களை எச்சரிக்கை செய்கையில் கனடிய ட்ரொட்ஸ்கிஸ்டுக்கள் குறிப்பிடுவதாவது:'டோரி பிரதமர் பிரியன் முல்றோனியைப் போலவே பிரிவினை வேண்டாம் எனப் பிரச்சாரம் செய்து வரும் குவிபெக் கட்சியின் தலைவர் ஜக்குவாஸ் பரிசியோவும் சீர்திருத்தக் கட்சியின் தலைவர் பிரெஸ்டன் மன்னிங்கும் தொழிலாளிவர்க்கத்தின் கொடிய எதிரிகள். 'சார்லாட்டவுன்' உடன்படிக்கையை (பிரிவினைக்கு இடமளிக்கும் உடன்படிக்கை) நிராகரிக்கையில் தொழிலாளர்கள் அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களை எதிர்க்கும் முதலாளி வர்க்கப் பிரிவினருக்குக் கிஞ்சித்தும் ஆதரவு வழங்கக் கூடாது, உண்மையில் குவிபெக்கிலும் கனடாவின் ஏனைய பாகத்திலும் 'வேண்டாம்' என வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்து வரும் தலைவர்கள் தீவிர குவிபெக்கியவாதிகளும் ஆங்கிலோ சோவினிஸ்டுக்களும் ஆவர்''

இக்கருத்துக் கணிப்பில் தமது வேலைத்திட்டத்தினை முன்வைக்கையில் ட்ரொட்ஸ்கிச அனைத்துலக தொழிலாளர் கட்சியின் அறிக்கை மேலும் கூறுவதாவது: ''கனடியன் குபிபெக்கிய தேசியவாதம் வேண்டாம்! வட அமெரிக்க ஐக்கிய சோசலிச குடியரசினை அமைப்போம்!.'' என அ.தொ. க. மொன்றீல், டொரான்டோ நகரங்களில் வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிட்டது. அரசியலமைப்புச் சட்ட நெருக்கடிக்குப் பின்னணியாக உள்ள சமூக, பொருளாதாரக் காரணிகளையும், 'தேசிய ஐக்கியம்', 'சுதந்திர குவிபெக்' கோரிக்கைகளின் பின்னணியில் உள்ள வர்க்க நலன்களையும் விளக்குகையில் அ, தொ. க. தேசியச் செயலாளர் கீத் ஜோன்ஸ் மொன்றீல் கூட்டத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

## நிச பிளவு

''பெரும் வர்த்தக அரசியல்வாதிகளதும் ,பத்திரிகைகளதும் பேய்ப் பட்டம் கட்டும் பிரச்சாரத்தினால் தொழிலாளர்கள் ஏமாந்து போய்விடக் கூடாது, கனடாவில் உள்ள நிச பிளவு வர்க்கப் பிளவுகளேயன்றி மொழி, பிராந்திய, தேசிய, இன வேறுபாடுகள் அல்ல, இரண்டு அடிப்படையானதும் எதிரெதிர் முகாம்களாக கனடிய சமுதாயம் பிளவுபட்டிருப்பது 'ஆம்'' 'இல்லை' கமிட்டிகள் அல்ல. சமஷ்டிவாதிகளாகவும் குவிபெக் தேசியவாதிகளாகவும் அல்ல, நிச பிளவு செல்வத்தைக் கட்டுப்படுத்தும் சிறுபான்மை முதலாளிகளுக்கும் உழைக்கும் சக்தியைத் தவிர வேறொன்றையும் கொண்டிராத பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கும் இடையிலேயே நிலவுகின்றது.

''சார்லட்டவுன் உடன்படிக்கை அக்டோபர் 26ல் நிறைவேறினாலும் சரி தோற்கடிக்கப்பட்டாலும் சரி தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரான ஒரு தசாப்தத்துக்கு மேலான எதிர்த்தாக்குதல்கள் தொடரும்'' எனவும் கீத் குறிப்பிட்டார்,

வேலையின்மை 11·6 வீதத்தினை எட்டியுள்ளதாகவும், வறுமையும், வீடின்மையும் மாபெரும் பொருளாதார மந்த காலத்துக்கு பின்னர் என்றுமில்லாத விதத்தில் உக்கிரம் கண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய கீத், இவை உலக முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியில் வேரூன்றியுள்ளதாகக் குறிப்பிட்டார். கனடியத் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவத்துக்கும் தேசிய அரசு முறைக்கும் எதிரான ஒரு புரட்சிப் போராட்டத்தில் அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்துடன் ஐக்கியப்படுவதன் மூலம் மட்டுமே தமது அடிப்படை உரிமைகளைப் பேணமுடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்,

பிரித்தானிய ரோனி கிளிவின் 'இன்டர் நஷனல் சோசலிஸ்டின்' குட்டி முதலாளித்துவ ஆதரவாளர்களுக்கும், மற்றும் தேசியவாதிகளுக்கும் எதிராக கனடியன் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் அனைத்துலகவாதத்தை வலியுறுத்தி வந்துள்ளனர், 'கனடாவோ. அல்லது குவிபெக்கோ எமது நாடு அல்ல, விரல்விட்டு எண்ணக் கூடிய முதலாளி வர்க்கக் குடும்பங்களே கனடிய உற்பத்திச் சக்திகளின் உரிமையைக் கொண்டுள்ளனர். இந்தப் போரிடும் சகல முதலாளித்துவக் கோஷ்டிகளிலும் இருந்து சுயாதீனமாகி—கனடியர்களும் சரி, குவிபெக்கியரும் சரி—பிற்போக்கு சமஷ்டி அரசை நிர்மூலமாக்கி, வட அமெரிக்க ஐக்கிய சோசலிசக் குடியரசினை அமைக்கும் போராட்டத்துக்கு இட்டுச் செல்லும் தொழிலாளர் அரசாங்கத்துக்குப் போராட வேண்டும்.

இந்தக் கருத்துக் கணிப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட ட்ரொட்ஸ்கிஸ்டுகள் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கனடியப் பிரிவான 'இன்டர்ஷனல் வேர்க்கஸ் கட்சியை' கட்டி எழுப்புவதன் மூலமே கனடியத் தொழிலாளர்கள் அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்துடன் ஐக்கியப்பட முடியும் என்பதை வலியுறுத்தினர்,

# முதலாளித்துவப் பாதையில் செல்ல சீன ஸ்டாலினிஸ்டுகள் தீர்மானம்

1989 ஜூன் தியன்மின் சதுக்கப் படுகொலைகளின் பின்னர் அக்டோபர் 18ம் திகதி நிறைவுற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 14 வது காங்கிரஸ் 'சந்தை சீர்திருத்தங்களை' விரிவுபடுத்தவும், 'முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளை முழுப்படியே தழுவிக் கொள்ளவும் தீர்மானம் செய்து கொண்டுள்ளது.

கிழண்டிப்போன தலைவர் டெங்சியாவோ பிங் தலைமையிலான சீன ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீடங்களில் பெரும் மாற்றங்களைச் செய்து கொண்டுள்ள இந்தக் காங்கிரஸ், 'சந்தை சீர்திருத்தங்களுடன்' இணைந்து, பீகிங் ஆட்சியாளர்களுக்கு எதிரான வெகுஜன எதிர்ப்பை நசுக்க அரச அடக்குமுறையை மேலும் உக்கிரமாக்கவும் சபதம் செய்துள்ளது. இந்த ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் தென் கொரியா, தாய்வான் (தேசிய சீனா) முதலாளித்துவ சர்வாதிகாரங்களை தமக்கு முன்மாதிரியாக கடைப்பிடித்து வருகின்றனர்,

காங்கிரசினால் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய அரசியல் வேலைத்திட்டம் ஒரு பொருளாதாரப் 'புரட்சி'க்கு அழைப்பு விடுத்துள்ள சமயத்தில், இலக்கு ஒரு 'சோசலிச சந்தை' பொருளாதாரத்தினை நிர்மாணிப்பதே எனக் குறிப்பிட்டுள்ளது.

உண்மையில் இந்த ஸ்டாலினிச அதிகாரத்துவம் 1949 புரட்சி மூலம் சீனத் தொழிலாளர்களும், விவசாயிகளும் வென்றெடுத்ததேட்டங்களை முறை முறையாகப் பிடுங்கிக் கொண்டுள்ளது. இதே சமயத்தில் முன்னைய சோவியத் ருஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களை நாசமாக்கிய சக ஸ்டாலினிச ஆட்சியாளர்களின் பாணியில் பீக்கிங் அதிகாரத்துவத்தின் உள்ளிருந்தும் ஒரு முதலாளித்துவ ஆளும் வர்க்கம் (கொம்பிரதோர்) தலை எடுத்துவருகின்றது.மேற்கத்தைய நாடுகளின் ஏகாதிபத்தியங்களுடனும் கொங்ஹொங்கிலும், தாய்வானிலும் ஆசியாவின் ஏனைய பாகங்களிலும் இருந்துவரும் சீனாவில் இருந்து வெளியேற்றப்பட்ட முதலாளிகளுடன் கைகோர்த்த வண்ணம் இந்த ஆளும் வர்க்கம் வளர்ச்சி கண்டு வருகின்றது. சீனா பற்றிய பொருளியல் ஆய்வாளர்கள், இன்று அரசாங்கத்துறை பொருளாதார உற்பத்தியில் வெறுமனே மூன்றில் ஒரு பங்கையே வகிப்பதாகக் கூறுகின்றார்கள். விவசாயத் துறையில் முதலாளித்துவ உறவுகள் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளதோடு கைத்தொழில் துறையிலும் கூட அரசாங்கத் துறை அரைப்பங்குக்கு சற்று கூடுதலாகவே உற்பத்தி செய்கின்றது.

## மோசடி

'சோசலிசம்', 'கம்யூனிசம்' வார்த்தை ஜாலங்கள் இன்னமும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அரசியல் வாழ்க்கையில் முழு அளவிலான பிடியைத் தொடர்ந்தும் கொண்டிருப்பதற்கான ஒரு மோசடி நடவடிக்கையாகவே ஸ்டாலினிச அதிகாரத்துவம் இதனைக் கையாள்கின்றது. இந்த 14வது காங்கிரசுக்கு மத்தியில் சீன செய்தி ஏஜன்சி, டெங்கினை மேற்கோள்காட்டி கூறியதாவது: ''சோசலிசத்தின் சாராம்சம் உற்பத்திச் சக்திகளை விடுதலை செய்வதும், விஸ்தரிப்பதும், வறுமையை ஒழிப்பதும், செல்வப் பங்கீட்டில் துருவப்படுத்தலை தவிர்ப்பதும் இறுதியில் பொதுச் செழிப்பை அடைவதுமாகும்'' என்றது,

( 9ம் பக்கம் பார்க்க)

# நவம்பர் 8 ஆசிரியர் - மாணவர் - பெற்றோர்

# இலவசக் கல்வியைக் காப்பது

1992 நவம்பர் 8ம் திகதி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடத்திய இலவசக் கல்வி உரிமை காக்கும் ஆசிரியர் — மாணவர் — பெற்றோர் மாநாட்டில் பு, க. க. செயலாளர் விஜே டயஸ் நிகழ்த்திய பேச்சு;




மாநாட்டின் அரசியல் அறிக்கையைச சமர்ப்பித்து பு. க. க. செயலாளர் விஜே டயஸ் பேசுகின்றார்.

## தோழர்களே, தோழியர்களே,

''இந்நாட்டின் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் தமது குழந்தைகளின் பேரில் இதுவரை காலமும் அனுபவித்து வந்த அடிப்படை உரிமையான இலவசக் கல்வி உரிமையை ஒழித்துக் கட்டும் பொருட்டு ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. அரசாங்கம் கடைப்பிடித்து வரும் வேலைத்திட்டத்திற்கு எதிராக நாடு பூராவும் பாடசாலைகளைச் சுற்றி மாணவர்களதும், பெற்றோர்களதும் ஆசிரியர்களதும் கிளர்ச்சி நிலைமை வளர்ச்சி கண்டு வருவதைக் காண முடியும். அநேக பாடசாலைகளில் வகுப்புக்கள் பகிஷ்கரிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது அவற்றிற்கு ஆசிரியர்களதும், பெற்றோர்களதும் ஆதரவும், பங்களிப்பும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

''திட்டவட்டமாகச் சொன்னால் பொது மக்களிடையே பரந்தளவில் வளர்ச்சி கண்டு வரும் இந்த எதிர்ப்புக்கள் இலவசக் கல்வி உரிமை இந்நாட்டு மக்களிடையே எந்தளவுக்கு ஆழமாக ஊடுருவிக் கொண்டுள்ளது என்பதும், பொது மக்களின் வாழ்க்கையும் அந்த உரிமையும் எவ்வளவு நெருக்கமாக ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து கொண்டுள்ளது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இலவசக் கல்வி சம்பந்தமான ஜனநாயக உரிமையைப் பிடுங்கிக் கொள்ள செயற்பட்டுவரும் பிற்போக்கு அரசாங்கம், அதன் காரணமாகவே ஏனைய சகல ஜனநாயக உரிமைகளையும் ஒழித்துக் கட்டும் கொடூரமான ஒடுக்குமுறையை திணித்து வருகின்றது. பயமுறுத்தல், பொலிஸ் கைது செய்தல், படுகொலை வேலைத் திட்டம் ஆகியன இலவசக் கல்வி உரிமையைக் காக்கப் போராட முன்வந்துள்ளவர்களுக்கு எதிராகத் திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

'சதிகாரர்கள்', 'மக்களைத் தூண்டுவோர்' பற்றிய பேச்சுக்கள் ஜனாதிபதி தொடக்கம் அரசாங்கத்தின் கீழ் மட்ட அதிகாரிகள், முதலாளி வர்க்கப் பத்திரிகைகளால் பரப்பப்பட்டு வருகின்றது. இது ஒடுக்குமுறைத் திட்டத்தின் இணைந்த பாகமாகும்.

''இலவசக் கல்வி உரிமையைக் காப்பது சம்பந்தமாக எதுவும் செய்வதில்லையென முடிவு செய்துள்ள சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ. தொ. கா. தலைவர்களும் மற்றும் துரோக அதிகாரத்துவங்களும் அத்துடன் நிறுத்திக் கொள்வதில்லையெனவும் முடிவு செய்து கொண்டுள்ளனர். இவர்கள் ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு இலவசக் கல்வி உரிமையைக் காக்க முன்வருபவர்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் ஒடுக்குமுறை இயக்கத்தின் கைத்தேங்காயாகச் செயற்பட முன்வந்துள்ளனர்.

''மாணவர்களும், பெற்றோரும், ஆசிரியர்களும் ஒன்றிணைந்து நடாத்தும் பரந்த பிரச்சாரங்களுக்கு எதிராக சமசமாஜக் கட்சித் தலைவர்கள் ஊளையிட்டு வருவது இதற்கு நல்ல உதாரணமாகும். 1992 நவம்பர் 5ம் திகதிய 'சமசமாஜ' பத்திரிகையில் 'பாடசாலை சபைகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள ஆசிரியத் தலையங்கம் இப்படிக் கூறுகின்றது:

'''இதுவரையும் அநேக பாடசாலைகள் இதற்கு எதிராகக் கிளம்பியுள்ளன. இவற்றின் உள்ளே பல்வேறு சக்திகளும் பேயாட்டம் ஆடி வருகின்றன'

''இலவசக் கல்வி உரிமையை ஒழித்துக் கட்டும் பொருட்டு 1981ல் கல்வி வெள்ளை அறிக்கை வெளிவந்ததில் இருந்து இன்று வரையும் யூ. என். பி. அரசாங்கம் பாய்ந்து விழுந்து முன்வந்து கொண்டிருக்கையில் அதைப் பற்றி வாய்மூடி மௌனிகளாக இருந்து வந்த இந்த துரோகத் தலைமைகள் இன்று 'பேயாட்டம்' பற்றிய பேச்சுடன் ஜனாதிபதி பிரேமதாசவின் குற்றச் சாட்டுக்களுக்கு கைத்தாளம் போடுபவர்களாகி உள்ளனர்.

''இத் துரோகத் தலைவர்களின் பேயாட்டங்கள், குறைபாட்டுக் கூச்சல்களில் இருந்து முழுமனே விடுபட்டுக் கொள்ளும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலவசக் கல்வி உரிமையைக் காக்கப் போராடி வரும் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்களுடன் தோள்கூட்டி நிற்கின்றது என்பதை நாம் இங்கு பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

## அரசியல் அம்சம்

''அத்தோடு இந்த முக்கிய ஜனநாயக உரிமையைக் காக்கும் போராட்டத்தில் அவசியம் கருத்தில் கொள்ள வேண்டிய அரசியல் அம்சத்தை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் முன்வைப்பது புரட்சிக் கட்சி என்ற முறையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொறுப்பாகும்.

''இலவசக் கல்வி உரிமையைக் காப்பதானது ஒரு சில மாணவர் போராட்டங்கள், எதிர்ப்புக் கோஷங்கள் மூலம் இட்டு நிரப்பிவிட முடியாததாகும். இதனை இப்போது யூ. என். பி. அரசாங்கம் நடைமுறைப் படுத்தி வரும் அரச பயங்கரவாத வேலைத்திட்டங்கள் நிரூபிக்கின்றன.

''சகல பாடசாலைகளுக்கு அருகேயும் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்களைப் பயமுறுத்தும் பொருட்டு ஆயுதம் தாங்கிய பொலிஸ் படையணிகள் குவிக்கப்பட்டுள்ளன. அத்தோடு பாடசாலைக்கு அருகில் மட்டுமன்றி உள்ளேயும் சிவில் உடை தரித்த பொலிஸ் உளவாழிகள் திணிக்கப்பட்டுள்ளனர். பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள மாணவ, மாணவிகள் கைதுசெய்யப்பட்டு வருகின்றார்கள்.

''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர் பலருக்கு எதிரான பொலிஸ் மிரட்டல்கள் பல மாகாணங்களிலும் உக்கிரம் கண்டுள்ளது, பாடசாலைகளுள் மாணவர்களைக் கையாட்களாகப் பாவித்து பு. க, க. வைச் சேர்ந்த ஆசிரியர்களை வேட்டையாடும் ஆத்திரமூட்டல் சம்பவங்கள் பற்றிய தகவல்கள் கட்சிக்குக் கிடைத்துள்ளன. கல்வி உரிமையைக் காக்கும் பிரச்சாரத்தின் ஒரு பாகமாக பு. க. க. பொது மக்களிடையே வினியோகித்த ஆயிரமாயிரம் துண்டுப் பிரசுரங்களை சதிகாரத் திட்டத்தின் ஒரு பாகமாகக் காட்டும் பிரச்சாரத்தில் அரசு வானொலியையும், ரூபவாகினியையும் முதலாளித்துவப் பத்திரிகைகளையும் பயன்படுத்தி வருகின்றது.

''பொதுமக்களுக்கும் அவர்களின் புரட்சிகர முன்னணிப் படையணிக்கும் எதிரான இந்த ஒடுக்குமுறை வலை வீச்சை சுக்கு நூறாக்காமல் இலவசக் கல்வி உரிமையைக் காக்கவோ அல்லது அந்நோக்கில் செய்யும் பிரச்சாரத்திற்கோ இடம் கிடையாது என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. இது ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசும் புரட்சிகரப் போராட்டத்தின் அவசியத்தினை தோற்றுவித்துள்ளது என்பதைப் புரிந்துகொள்வது சிரமமான காரியம் அல்ல.

''நாம் இந்த ஒடுக்குமுறை இயந்திரம் பலப்படுத்தப்பட்டு வருவதைப் பற்றிப் பேசும் போது இன்னும் ஓர் விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். படுகொடூரமான அடக்குமுறைப் பாதையில் யூ. என், பி, அரசாங்க

டுப் பெண்களும், மாணவர்
யச் சார்பு முதலாளித்துவ
த்துக் கொள்ள முடியாத
ளனர்.

''தொழிலாள, ஒடுக்கப்
வித்து வரும் சகல உதவி
திய நிதி மூலதனத்தின் வெ
ஒழித்துக்கட்டும் அவசியம் யூ
ஏற்பட்டுள்ளது. இலவச சு
பொருட்களின் பேரிலான மா
பவித்து வந்த உரமானியம்
யும் நீக்கவும் தண்ணீர் வரி
மூலமும், இதுவரை காலம்
பாட்டு முறையை நீக்குவதன்
ளைத் திணிக்க அரசாங்கம்
கின்றது,

''பாடசாலை அபிவிருத்
டியின் கீழ் குழந்தைகளின்
யும் பெற்றோர் மீது திணி
மூடப்படும் பாடசாலைகளில்
கில் வேலை நீக்கம் செய்
இணைந்தது.

''1993க்கான யூ. என்.
செலவுத் திட்டத்தை ஆய்
காட்டுமிராண்டித் தாக்குதல்
மாக்கும் பொருட்டு ஏகாதிப
ஈடுபட்டுள்ளது தெளிவாகி
பற்றாக் குறையை குறைப்
அரசாங்கம் ஆரம்பிக்கின்றது
வருமானத்தில் நூற்றுக்கு 1
செலவுத் திட்டப் பற்றாக் கு
தில் நூற்றுக்கு 9% ஆக குறை
ளது. இது உலக வங்கியின
யத்தினதும் திட்டவட்டமான
வதாகும் என்பதை நாம் நி

''அது மட்டுமன்றி அ
மொத்தத் தேசிய உற்பத்தி
நூற்றுக்கு 29% ஆக குறை
அமைச்சர் குறிப்பிட்டுள்ளா
பற்றாக் குறை வெட்டானது
பன் மூலம் அன்றி செலவின
சாதிக்கப்படவுள்ளது என்ப
வாக்குகின்றது.

## பாதுகாப்பு

எதிர்வரும் ஆண்டுக்கான
1200 கோடியால் அதிகரிக்கப்
மக்கட் படுகொலை யுத்தத்தி

# மாநாடு: எப்படி?

மும், ஆளும் வர்க்க
மும் காலடி வைக்கத்
தள்ளப்பட்டுள்ள தற்
குக் காரணம் முத
லாளித்துவ ஆட்சிய
மைப்புக்கு எதிரான
பரந்த வெகுஜன எதி
ர்ப்பு வளர்ச்சி கண்டு
வருவதேயாகும். மறு
வார்த்தையில் சொன்
னால் இலவசக்கல்வி
உரிமையையோ அல்
லது வேறு எந்த
வொரு அடிப்படை
உரிமையையோ
பேணிக்காப்பதற்
கானபுரட்சிகரபோரா
ட்டத்தில் ஈடுபடுத்
தக் கூடிய சமூக சக்தி
நாலா புறமும் வளர்
ச்சி கண்டு வருகின்
றது. தோட்டப்புற,
நகர்ப்புறத் தொழி
லாளிவர்க்கமும்,
ஒடுக்கப்படும் தமிழ்
தேசிய இனமும், கிரா
மப்புற ஏழைகளும்,
இளைஞர்களும் வீட்
ம் இன்று ஏகாதிபத்தி
சி முறையை இனியும் சகி
மைக்குத் தள்ளப்பட்டுள்

மக்கள் இன்று அனுப
யங்களையும் ஏகாதிபத்
டித்த நலன்களின் பேரில்
ன். பி. அரசாங்கத்துக்கு
ார சேவை, பாவனைப்
ங்கள், விவசாயிகள் அனு
பட சகல உதவிகளை
ான்றவற்றை விதிப்பதன்
ந்து வந்த விலைக்கட்டுப்
மும் மக்கள் மேல் சுமைக
டவடிக்கை எடுத்து வரு

பைகளை நிறுவும் மோச
வியின் முழுச் சுமையை
தும் இதன் விளைவாக
சிரியர்களை ஆயிரக்கணக்
ம் இத் திட்டத்துடன்

அரசாங்கத்தின் வரவு—
செய்யும் போது இந்தக்
ளப் பன்மடங்கு உக்கிர
ய சார்பு ஆளும் வர்க்கம்
. வரவு-செலவு திட்டப்
பற்றிய வாயடிப்புடன்
88ல் மொத்தத் தேசிய
ீதமாக இருந்த வரவு—
யை எதிர்வரும் வருடத்
பதாக அது குறிப்பிட்டுள்
சர்வதேச நாணய நிதி
ட்டளைகளை அமுல் செய்
ூட்ட விரும்புகின்றோம்.

ங்கத்தின் செலவினங்கள்
நூற்றுக்கு ३5%ல் இருந்து
பட்டுள்ளதாகவும் நிதி
வரவு-செலவுத் திட்டப்
ருமானத்தை அதிகரிப்ப
ள வெட்டுவதன் மூலமே
இந்தக் கூற்றுக்கள் தெளி

## செலவு

ாதுகாப்புச் செலவினம்
ுள்ளது. அரசாங்கத்தின்
டக்கிரம் செலவுக் குறைப்

புக்களால் தணிந்து போகமாட்டாததோடு அதற்குப் பதிலாக அரச பயங்கரவாதத்தையும், இனவாத யுத்தத்தையும் உக்கிரமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதையே இவை காட்டுகின்றது. இந்நிலைமையின் கீழ் செலவினங்களின் வெட்டானது பொதுமக்கள் இதுவரை காலமும் அனுபவித்து வந்த அனைத்தையும் வெட்டித் தள்ளுவதாகும் என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும். எதிர்வரும் ஜனவரியில் தொழிலாளர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ள 18வீத சம்பள உயர்வு இந்த உ.விமானிய வெட்டுக்களால் சிருஷ்டிக்கப்படும் அழிவு நிலைமைக்குச் சுண்ணம் தடவவும் போதாது என்பது புரிந்து கொள்ள வேண்டிய மற்றுமோர் விடயமாகும். இந்த ஒரு தொகை தாக்குதல்களின் கீழ் கிராமப்புற ஏழை மக்கள் நோய் நொடிகளுக்குப் பலியாகுவோரதும் மரண தண்டனை விதிக்கப்பட்டோரதும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

''யூ, என். பி. அரசாங்கம் இது வரை காலமும் தனது செலவினங்களை எங்ஙனம் குறைத்துக் கொண்டுள்ளது என்பதை விபரித்துள்ள முறையையும் சற்றுக் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசாங்கச் சொத்துக்களை பன்னாட்டுக் கம்பனிகளுக்கும் அவற்றுடன் கைகோர்த்துக் கொண்டுள்ள இந்நாட்டு 'கொம்பிரதோர்' முதலாளிகளுக்கும் கையளிப்பதன் மூலமே அரசாங்கச் செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது. இது பொதுமக்களுக்கு மாபெரும் வாய்ப்பாகி உள்ளதாயும்அரசாங்கம் வாயடித்து வருகின்றது, ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் பிடிக்குள் இந்நாட்டுக் கைத்தொழில்களும், நிறுவனங்களும் கொணரப்பட்டதை தொடர்ந்து ஏற்கனவே இலட்சக் கணக்கான — இல்லையேல் — பல்லாயிரக்கணக்கானோரதும் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த இலட்சேப லட்சம் மக்களதும் ஜீவியம் நாசமாக்கப்பட்டது. காட்டுமிராண்டித்தனத்தை ஸ்தாபிதம் செய்வதையே தமது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட ஆளும் வர்க்கத்தினால் மட்டுமே இதனை ''பொதுமக்களுக்கான சலுகைகள்'' எனக் கூறிக் கொள்ள முடியும்.

''அத்தகைய ஆளும் வர்க்கங்கள் வரலாற்று அரங்கில் இருந்து அடிபட்டுச் செல்லப் போகின்றன. தொழிலாளி வர்க்கம் முன்னணியில் நின்று, சகல ஒடுக்கப்படும் மக்கட் குழுக்களையும் தாது வர்க்கத் தலைமையின் கீழ் அணிதிரட்டுவதன் மூலம் முதலாளித்துவத்தைத் துடைத்துக் கட்டுவதற்கான புரட்சிகரப் போராட்டத்தில் இறங்குவதை இந்நிலைமையில் நியாயப்படுத்தியுள்ளது. இந்த வரலாற்று அடிப்படையில் நின்று போராடுவது அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே.

''அரசாங்கச் செலவினங்களில் 12,700 கோடி ரூபாக்களை அடைக்கும் பொருட்டு யூ. என், பி. அரசாங்கம் சிபார்சு செய்துள்ள விதிமுறைகள் ஆளும் வர்க்கத்தின் மிலேச்சத் தன்மையின் கொடிய வடிவத்தினை எடுத்துக் காட்டுகின்றது' இந்த ரூபா. 12700/- கோடிகளில் 4800 கோடி ரூபாக்களை கடன்கள், உதவிகள் மூலம் பெற்றுக் கொள்ளப் போவதாகக் கூறும் யூ. என். பி. அரசாங்கம், எஞ்சிய 7900 கோடி ரூபாக்களின் பெரும் சுமையை நேரடியாக பொதுமக்களின் தலையில் சுமத்தியுள்ளது. இந்த 7900 கோடி ரூபாக்களில் ரூபா. 1200 கோடியை மட்டுமே தனியார், கம்பனி வரிகள் மூலம் திரட்டப்போவதாக தெரிவித்துள்ளது. பன்னாட்டுக் கம்பனிகளும், கூட்டுக் கம்பனிகளும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளைச் சூறையாடிக் கொள்ளும் நிலைமையின் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரி விலக்குக் காலங்களையும் சலுகைகளையும் கணக்கில் கொள்ளும் போது அத்தொகையும் கூடத் திரட்டப்படுமா என்பதும் சந்தேகத்துக்கு உரியதே. அவ்வாறே இந்நாட்டுப் பெரும் செல்வந்தர்களுக்கு இதுவரை காலமும் விதிக்கப்பட்டு வந்த வரிச் சுமைகளையும் கூடத் தளர்த்த அரசாங்கம் தீர்மானம் செய்துள்ளது.

''இதற்குச் சமாந்தரமான முறையில் பொதுமக்களிடம் இருந்து நானாவிதமான முறையில் திரட்டப்படவுள்ள நிதியின் அளவு இதைக் காட்டிலும் மூன்றரைப் பங்கு அதிகமானதாகும். அந்நிதி ரூபா. 4800 கோடியாகும். இத்தொகையை ஏற்கனவே பட்டினி நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ள பொதுமக்களிடம் இருந்து திரட்டப்போகின்றது.

''இதனை யூ. என், பி. அரசாங்கம் கூட அப்பட்டமாக ஒப்புக் கொள்கின்றது, ''4200 கோடி மறைமுக வரிகளில் பெரும்பகுதி இந்நாட்டு ஏழைமக்களிடம் வரி விதிப்பதன் மூலமே சேர்க்கப்படுகின்றது. அவர்கள் கோபித்துக் கொள்ளாமல் இந்த வரியைச் செலுத்துகின்றார்கள்,''

''ஏகாதிபத்தியச் சார்பு இந்த ஆளும் வர்க்கத்தின் கேவலத்தினை அம்பலமாக்கும் இக் கூற்று, இந்நாட்டுத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் சார்பில் பேசிக் கொள்வதாகக் கூறும் சகல துரோகத் தலைமைகளதும் அரசியல் நடைமுறைக்கு எதிரான ஒரு குற்றச்சாட்டாகும். பொதுஜனங்கள் இடர்ப்பாடுகளுக்கும், ஆபத்துக்களுக்கும் முகம் கொடுத்த எந்தவொரு கட்டத்திலும் இவர்கள் வெறும் கூப்பாடு போடத் தன்னும் முன்வரவில்லை. அதுமட்டுமன்றி பொதுஜனங்களிடையே தன்னியல்பாக வளர்ச்சி கண்டு வந்த எதிர்ப்பையும் குரோதத்தையும் வெறும் மலடுபற்ற விட்ட வர்களும் இவர்களே.



மாநாட்டின் கலந்துரையாடலில் பங்கு கொண்டு பேசும் வெலிமட மாணவி.

''ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி, அரசாங்கம் இலவசக் கல்வி உட்படத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் சகல வாழ்க்கை, ஜனநாயக உரிமைகளுக்கும் எதிராகத் தொடுத்து வரும் தாக்குதலை நிறுத்துவதற்கு தொழிலாளி வர்க்கத்தையும், ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்ட வேண்டின் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ மற்றும் சகல சந்தர்ப்பவாதத் தலைவர்களையும் தொழிலாள, பொதுஜன இயக்கத்தில் இருந்து துரத்தியடிக்கச் சகல போராளிகளும் கிளர்ந்து எழ வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வலியுறுத்தக் காரணம் அதுவே. இத்தலைவர்களின் அரசாங்கச் சார்பு நிலைப்பாடானது பொதுமக்களின் மேல் அழிவின் சுமையை திணிக்கவும் மட்டுமன்றி, தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்கள் இவற்றுக்கு தோள் கொடுப்பதைத் தவிர வேறொன்றுக்கும் இலாயக்கில்லாத ஒரு மலட்டுக் கும்பல் என்று அவர்களைத் தள்ளி வைக்கவும் செயற்பட்டு வருகின்றது.

''யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதலின் பின்னணியில் உள்ள பொருளாதார, அரசியல் சக்திகளை நன்கு புரிந்துகொண்டுள்ள ஒரு புரட்சித் தலைமையின் கீழ் அணிதிரண்டு கொள்வதன் மூலமே தொழிலாளர் வர்க்கத்தினாலும், அந்தப் புரட்சிகரச் சக்தியைச் சூழ அணிதிரண்டு கொண்டுள்ள சிங்கள, தமிழ் ஒடுக்கப்படும் மக்களினாலுமே பேரழிவைத் தந்துள்ள இந்த முதலாளித்துவ அமைப்பைத் துடைத்துக் கட்டி தமது அவசியங்களைப் பூர்த்தி செய்யும் சோசலிச சமூக முறையைக் கட்டி எழுப்புவதை நோக்கிச் செல்ல முடியும்.

''நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஈடுபட்டுள்ள போராட்டத்தின் அரசியல் அர்த்தம்: இந்த விஞ்ஞானபூர்வமான மார்க்சிச நனவு கொண்ட புரட்சிகரத தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இயக்கமொன்றைக் கட்டியெழுப்புவதே என்பதை நாம் இங்கு மீண்டும் ஒரு தடவை கூறிவைப்போம்.'' —தொடரும்





வாசியுங்கள்

விலை 25-00

தொடர்புகள்:-
ஆனந்தவக்குப்புற
90, 1வது மாளிகா
கந்த ஒழுங்கை,
கொழும்பு-10.

# "வெள்ளையனே வெளியேறு" இயக்கமும் சமசமாஜக் கட்சியின் சந்தர்ப்பவாதமும்

நந்த விக்கிரமசிங்க

(கடந்த இதழின் தொடர்ச்சி)

இந்த 'வெள்ளையனே வெளியேறு' போராட்ட இயக்கத்தின் உள்ளே போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி போராடிய முறைமையை நாம் முன்னைய கட்டுரையினுள் ஆய்ந்தோம். அது பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்துக்கும் உலக சோசலிசப் புரட்சியின் முன்நோக்கிற்குமான போராட்டமாக விளங்கியது, யுத்தத்தின் ஏகாதிபத்தியப் பண்பு பற்றிய நான்காம் அகிலத்தின் மார்க்சிச ஆய்வினை அது அடிப்படையாகக் கொண்டிருந்தது.

''பாட்டாளி வர்க்க முன்னணிப் படையானது ஏகாதிபத்திய யுத்தத்தின் கொடிய எதிரி. ஆனால் அது இந்த யுத்தத்திற்கு அஞ்சவில்லை. அது வர்க்க எதிரி தேர்ந்தெடுத்துள்ள கலகத்தை எதிர்த்துப் போராடத் தயார். அது இந்தக் கலகத்துள் தமது பதாகையை உயரத் தூக்கிப் பிடித்தவண்ணம் நுழைந்துகொள்கின்றது.

''உலக நிகழ்வுகளின் பொதுப் பயணத் திசையை சரியாகத் தீர்க்கதரிசனமாகக் கண்ட ஒரே இயக்கம் நான்காம் அகிலமே. புதிய ஏகாதிபத்தியம் காட்டுமிராண்டித் தனமானது என முன்னுணர்ந்த ஒரே இயக்கமும் அதுவே. முதலாளித்துவ ஜனநாயகவாதிகளதும். ஸ்டாலினிச பரம்பரையின் குட்டி முதலாளித்துவ குண்டர்களினதும் சமாதான மோசடியை அம்பலமாக்கியதும், 'மக்கள் முன்னணி' என்ற பேர் கொண்ட வர்க்க உடனுழைப்புப் போக்குக்கு எதிராகப் போராடியதும், ஸ்பெயினில் கோமின்டானின் துரோக விதிமுறையை அவமானத்துக்கு உள்ளாக்கியதும் (*Poum*) பூம் அமைப்பின் மத்தியவாத நப்பாசைகளை கடுமையான விமர்சனத்துக்குள்ளாக்கியதுமான புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் பதாகையின் மூலம் தமது காரியாளர்களை பயிற்றியதுமான ஒரே இயக்கம் நான்காம் அகிலமே. யுத்தத்தினுள் நாம் கடைப்பிடிக்கும் விதிமுறையானது சமாதான காலத்தில் நாம் கடைப்பிடித்த விதிமுறையின் திட்டவட்டமான தொடர்ச்சி மட்டுமே,

''நான்காம் அகிலம் தனது வேலைத்திட்டத்தை மார்க்சிசத்தின் உறுதியான கோட்பாட்டு அடிப்படையின் மேலேயே கட்டி எழுப்புகின்றது. நானாவித முகாம்களைச் சேர்ந்த உத்தியோகபூர்வமான தொழிலாளர் அதிகாரத்துவத்தின் அங்கத்தவர்கள் வரையும் பரவியுள்ள வெறுப்புக்கிடமான ஐயவாதத்தினை அது நிராகரிக்கின்றது. இந்த ஐயவாதம் பலவேளைகளிலும் முதலாளித்துவஜனநாயகத்துக்கு அடிபணிவதை மூடிமறைக்கும் ஒரு திரையாகச் சேவை செய்கின்றது. எமது வேலைத்திட்டத்தை... இரு வார்த்தைகளில் சுருக்கிக் கூற முடியும்: 'தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம்''.

ஹிட்லரின் பாசிசத்துக்கு எதிராக 'ஜனநாயக' பிரித்தானிய. அமெரிக்க ஏகாதிபத்தியக் கோஷ்டிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற சந்தர்ப்பவாதிகளுக்குப் பதில் அளிக்கையில் நான்காம் அகிலம் மிகவும் உறுதியாக இருந்தது, ''சிலர் இப்படிக் கேட்கிறார்கள்: தொழிலாளி வர்க்கம் இன்றைய நிலைமையுள் ஜேர்மன் பாசிஸ்டுகளுக்கு எதிரான போராட்டத்தில் ஜனநாயகவாதி அரசுகளுக்கு உதவி வழங்க வேண்டாமா? முழு முதலாளித்துவ அமைப்பும் உடைந்து கொட்டும் நிலையில் நாற்றம் கண்ட ஜனநாயகத்துக்கும் கொலைகார பாசிசத்துக்கும் இடையேயான வேறுபாடு உடைந்து வீழ்கின்றது.'' என ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டார். பிரித்தானிய,பிரான்சிய ஏகாதிபத்தியவாதிகளின் வெற்றி ஹிட்லரதும், முசோலினியினதும் வெற்றியினால் ஏற்படும் ஆபத்துக்கு எதுவிதத்திலும் குறையாத ஆபத்தினை மனித இனத்துக்கு உண்டுபண்ணும் என நான்காம் அகிலம் சுட்டிக் காட்டியது,

இரண்டாம் உலக யுத்தம் பற்றிய ஆய்வுகளுக்கு கிடைத்த வெற்றியை சுட்டிக் காட்டுகையில் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டவை முக்கியமானவை. ''... சகல நாடுகளிலும் உள்ள தோழர்களில் பெரும்பான்மையினர் யுத்தத்தின் முதலாவது தேர்வில் தேறிவிட்டனர், இவ்விடயம் நான்காம் அகிலத்தின் எதிர்காலத்துக்கு அளப்பரிய முக்கியத்துவம் வகிக்கின்றது''. (இரண்டாம் உலக யுத்தம் பற்றிய நான்காம் அகிலத்தின் அறிக்கை மே, 1940)

போல்ஷிவிக் கட்சி நிறுவப்பட்டதோடு இந்தியாவினுள் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் அரசியல் நடவடிக்கைகள் பெரும் வளர்ச்சி கண்டன. இலங்கையில் மட்டுமன்றி பம்பாய், கல்கத்தா, சென்னை, கான்பூர், அஹமதாபாத் முதலான முக்கிய நகரங்களிலும் கட்சிக் கிளைகள் நிறுவப்பட்டன. ஆங்கிலம், ஹிந்தி, வங்காளம், தமிழ், சிங்களம் முதலான மொழிகளில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஒழுங்குமுறையாக வெளிவந்தன. கட்சியின் பிரசுரங்கள் தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் மட்டுமன்றி, படைவீரர்கள் மத்தியிலும் வினியோகிக்கப்பட்டன.

பம்பாயில் பிரசுரிக்கப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரம் பின்வருமாறு குறிப்பிட்டது? ''...நஷ்டஈடின்றி நிலவுடமையாளர்களின் அதிகாரத்தை ஒழித்துக்கட்டு!'' விவசாயிகளின் கடன்களை அகற்று! என்ற சுலோகம் போராட்டத்தின் முக்கிய சுலோகமாகியது. அரசாங்கத்துக்கு வரிகொடாமை இயக்கம் மட்டுமன்றி சகல நிலவுடமையாளர்களுக்கும் நிலவரி கொடாமை இயக்கத்தையும் முடிந்த மட்டும் பரந்தளவில் ஆரம்பிக்க வேண்டும். இதனை விவசாயிகள், விவசாயிகளின் கமிட்டி நிறுவி நிலங்களை கைப்பற்றுவது வரை விஸ்தரிக்கவேண்டும்.''

வேலைநிறுத்தக் கமிட்டிகளையும், தொழிலாளர்களின் பாதுகாப்பு கமிட்டிகளையும் நிறுவ அழைப்பு விடுத்த போல்ஷிவிக் கட்சி பிரித்தானிய, ருஷ்ய படையாட்களுக்கும் இடையேயும் தமது பிரச்சாரத்தை முன் எடுத்தது.

போல்ஷிவிக் கட்சித் தலைவர்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர்களைப் போன்று தாமாகவே முன்வந்து சிறைக்குச் செல்லவில்லை. அவர்களில் பலர் 1943ம் ஆண்டு வரையும் இரகசியமாகத் தொழிற்பட்டு வந்தனர், லெஸ்லி குணவர்த்தனா, விவியன் குணவர்த்தனா, கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியோர் அங்ஙனம் இறுதிவரை தொழிற்படுவதில் வெற்றி கண்டனர். ஸ்டாலினிஸ்டுகளின் உளவு வேலைகளினாலேயே போல்ஷிவிக் தலைவர்கள் ஏகாதிபத்திய பொலிசாரிடம் சிக்க நேரிட்டது. குல்கார்ணி என்ற இந்தியன் ஸ்டாலினிஸ்ட் என். எம். பெரேராவை கைது செய்வதற்கு நேரடியாக உளவு பார்த்தான். போல்ஷிவிக்குகளின் அரசியல் நடவடிக்கைகள் எந்தளவுக்கு பலம் மிக்கவையாக விளங்கியது என்பதற்கு 1943 இந்திய ஸ்டாலினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாட்டு பேச்சு சான்று பகர்கின்றது, ''நேர்மையுள்ள ஒவ்வொரு இந்தியனும் ட்ரொட்ஸ்கிச துரோகிகளை நாட்டின் முக்கிய எதிரியாகக் கொண்டு அரசியல் வாழ்வில் இருந்து துரத்தியடித்துக் கொலை செய்யவேண்டும்'' என்றது.

1940 ஆகஸ்டில் லியொன் ட்ரொட்ஸ்கி ஸ்டாலினிஸ்டுகளால் மெச்சிக்கோவில் படுகொலை செய்யப்பட்ட போதிலும் இளம் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி அக்டோபர் புரட்சியின் படிப்பினைகளையும் இந்தியாவின் 1942 ஆகஸ்டு கிளர்ச்சியுள் கொணர்ந்தது. போல்ஷிவிக் கட்சியின் திடசங்கற்பம் மிக்க காரியாளர்கள் தமது கட்சிக்குள் தலைதூக்கிய தேசியவாத — சந்தர்ப்பவாத நிலைப்பாட்டிற்கு (சுக்ளா, என். எம். பெரேரா, பிலிப் குணவர்தனா) எதிராக இதன் படிப்பினைகளை தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் எடுத்துச் செல்வதில் ஈடுபட்டிருந்தனர். இச்சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்துடன் போல்ஷிவிக் கட்சி கல்கத்தாவில் அங்கத்தவர் எண்ணிக்கையைப் பெருக்கியதோடு 'ஸ்பாக்' (தீப்பொறி) 'இன்கிலாப்' (புரட்சி- வங்காள மொழிப்பத்திரிகை) களையும் 'நிரந்தரப் புரட்சி' சஞ்சிகையையும் அச்சிட்டு வெளியிட்டது. இப்பிரசுரங்களில் 5000 பிரதிகள் விற்பனையாகியதோடு 25 லோக்கல்கள் இரகசியமாகச் செயற்பட்டன. கட்சிக்கு துறைமுக, பக்டரி தொழிலாளர்களிடையே பெரும் ஆதரவு கிடைத்தது.

சென்னையில் பழையதும் பெரியதுமான பகிங்காம்—கர்நாட்டிக் (பி/அன்ட்/சீ) துணி நெசவு ஆலைத் தொழிற்சாலை தொழிற்சங்கத்தை (மட்ராஸ் லேபர் யூனியன்) போல்ஷிவிக் கட்சி அங்கத்தவர்கள் கைப்பற்றினர்.

இலங்கையில் போல்ஷிவிக் கட்சி முதலில் 'சமசமாஜய' பத்திரிகையையும் பின்னர் 'சட்டன' (போராட்டம்) பத்திரிகையையும் வெளியிட்டது.

இப்பத்திரிகை தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற மும்மொழிகளிலும் வெளிவந்தது. அரசின் ஆதரவைப் பெற்று வந்த ஸ்டாலினிஸ்டுகளுக்கு எதிராகப் போராடிய போல்ஷிவிக்குகள். துறைமுகம் உட்பட அரசாங்கத்துறையில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தினுள் ஒடுக்கப்படும் குட்டிமுதலாளித்துவத் தட்டினரையும் ஈர்த்தனர்.

## உலக யுத்தத்தின் முடிவு

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவுடன் உலகம் பூராவும் வெடித்த புரட்சிகர கிளர்ச்சிகள் இந்தியாவையும் விட்டுவைக்கவில்லை. 1946 பெப்ரவரி 18ல் பம்பாயில் இடம்பெற்ற கடற்படையினரின் கிளர்ச்சி நாடு பூராவும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் கிளர்ச்சிக்கு இட்டுச் சென்றது. பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவில் இருந்து உடன் வெளியேற வேண்டும்! சுபாஷ் சந்திரபோஷின் சுதந்திர இராணுவத்தின் படையினருக்கு எதிரான வழக்கு உடன் நிறுத்தப்பட வேண்டும் இந்தோனேஷியாவில் இருந்து—பிரித்தானிய — இந்தியப் படைகளை விலக்க வேண்டும்! என்ற அரசியல் போராட்டம் நாடு பூராவும் பரவியது.

காங்கிரஸ் கட்சித் தலைவரான மௌலானா அசாத் இந்நிலைமையைப் பின்வருமாறு விபரிக்கிறார்: ''சுயவிருப்பின் பேரில் முழு இந்திய மக்களும் கொதித்தெழுந்துள்ளமை பிரித்தானியர்களுக்குத் தெளிவாகியது. சுதந்திரத்தின் பேரில் யுத்த களத்தில் இந்திய இரத்தத்துக்கான கட்டணத்தைச் செலுத்தும்படி படையாட்கள் பிரித்தானியரை வேண்டினர். போராட்டத்தின் செய்தி பரவியதும் பொது மக்களின் பெரும்பான்மையினர் அதற்கு ஆதரவாகக் கிளர்ந்து எழுந்தனர். அரசாங்கம் கலக்கமடைந்தது. பிரித்தானிய —இந்திய கடற்படையின் சகல கப்பல்களும் பிரித்தானிய அதிகாரி, படையினரின் கீழ்க் கொணரப்பட்டது. 1946 பெப்ரவரி 20ம் திகதி இந்திய தேசியப் படையினர், கிளர்ச்சி வீரர்கள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய மறுத்த நிலையில், பிரித்தானிய தேசிய படையாட்களைக் கொண்டு நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 250பேர் கொல்லப்பட்டனர்.

வேலை நிறுத்தக் காரரின் நடவடிக்கைக் கமிட்டிகள் மக்களுக்குப் புரட்சிகர அழைப்பு விடுத்தன: ''எமது போராட்டம் வரலாற்றுப் புகழ் மிக்கதும், படையினதும், மக்களதும் இரத்தம் முதல் தடவையாக பொதுப் போராட்டத்தின் பேரில் பெருக்கெடுத்தது. இராணுவ சேவையில் இதை நாம் ஒரு போதும் மறக்கமாட்டோம், நீங்களும் இதை மறக்கப் போவதில்லை என்பதை நாம் அறிவோம். எமது மாபெரும் மக்கள் நீடூழி வாழ்க! இந்தியா வெல்க!'' (இன்டியா வின்ஸ் ப்ரீடம்' — மௌலானா அசாத்) இந்த விதத்தில் பம்பாய், சென்னை, கல்கத்தா உட்பட முக்கிய இந்திய நகரங்களைத் தழுவிய விதத்தில் தொழிலாளர் போராட்டங்கள் ஆரம்பித்தன.

இந்த மக்கள் கிளர்ச்சிக்கு இந்திய காங்கிரஸ் கட்சி தலைமை பெரும் எதிர்ப்புக் காட்டியது. தேசிய முதலாளி வர்க்கத்தின் துரோகம் இந்த விதத்தில் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் படிந்துள்ளது.

காங்கிரஸ் கட்சித்தலைவர் மௌலானா அசாத் இந்நிலைப்பாட்டை பின்வருமாறு விபரித்தார்: ''நாம் செய்ய வேண்டியது பயணத்திசையை பார்வையிட்டு பிரித்தானிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதே. ஆதலால் இந்திய கடற்படை அதிகாரிகளின் இந்நடவடிக்கை தவறானது என எனக்குத் தோன்றியது.... போராட்டப் பாதையில் குதிப்பது புத்திக்கு ஏற்றதல்ல. வேலைநிறுத்தம் செய்த படையாட்களுக்கு எனது எச்சரிக்கை நிபந்தனையின்றி வேலைக்குத் திரும்புவதே. அவ்வாறு நான் பம்பாய் காங்கிரஸ் தலைவர் சர்தார் வல்லபாய் பட்டேலுக்கும் அறிவித்துள்ளேன்'' ('இன்டியா வின்ஸ் ப்ரீடம்' — மௌலானா அசாத்)

(மிகுதி அடுத்த இதழில்)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் சோசலிஸ்ட் வேட்பாளரது இலங்கை விஜயம்

அம்பலாங்கொட:

## பயமுறுத்தலுக்கு மத்தியிலும் பெரும் கூட்டம்



அம்பலாங்கொட பொதுக் கூட்டத்துக்கு வருகை தந்த தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், பாடசாலை மாணவ, மாணவியர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரொட்ஸ்கிச வேர்க்கஸ் லீக்கின் வேட்பாளராகப் போட்டியிட்ட தோழி, ஹெலன் ஹெல்யாட்டின் இலங்கை விஜயத்தின் முதலாவது பகிரங்கக் கூட்டம் அம்பலாங்கொடயில் நடைபெற்றது, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அம்பலாங்கொட அமைப்பாளர்களுக்கு எதிராக யூ. என். பி. குண்டர்களும், பொலிசாரினதும் வேட்டைகளுக்கு எதிராக இடம்பெற்றுவரும் பிரச்சார இயக்கத்தின் உச்சக்கட்டமாக இக்கூட்டம் விளங்கியது.

கடும் மழையையும் பொருட்படுத்தாது 200க்கும் அதிகமான தொழிலாளர்களும், இளைஞர்களும், மாணவர்களும் கூட்டத்துக்கு வநகை தந்திருந்தனர். தோழி, ஹெலன் ஹெல்யாட்டின் உரையின் இறுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவர்கள் பெரும் அக்கறையோடு கலந்து கொண்டனர். அம்பலாங்கொட ஆண், பெண் பாடசாலைகளைச்சேர்ந்த மாணவ மாணவியர் அரசின் பயமுறுத்தல்களுக்கு மத்தியிலும் பெருமளவில் கூட்டத்துக்கு வருகை தந்திருந்தது ஒரு சிறப்பம்சமாக விளங்கியது.

ஏகாதிபத்திய அமைப்பின் கொடூரமான நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எதுவிதமான தேசியத் தீர்வும் கிடையாது எனக் குறிப்பிட்ட தோழி, ஹெல்யாட், சோசலிசம் தோல்வி கண்டு முதலாளித்துவம் வென்றுவிட்டது என்ற ஏகாதிபத்திய வக்கீல்களின் வாதங்களை அம்பலப்படுத்தும் விதத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிசநிலைமையை அம்பலப்படுத்தினார்.

பொதுக் கூட்ட மேடையை அலங்கரிப்பதில் அம்பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த பல இளம் கலைஞர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு இக் கூட்டத்தினை ஒழுங்கு செய்யும் பொருட்டு பு. க. க. அம்பலாங்கொட கிளை ஏற்பாடு செய்த பிரச்சார இயக்கத்தின் போது ரூபா 10000/க்கும் அதிகமான நிதி திரட்டப்பட்டது.

# கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம்: தொழிலாளர்கள் ஹெலன் ஹெல்யாட்டை சூற்றி வளைத்தனர்



கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் தோழி. ஹெலன் ஹெல்யாட்டை தே॥ழமையுடன் சுற்றிவளைத்துக் கொண்டுள்ள தொழிலாளர்கள்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்துக்கு விஜயம் செய்ய யூ. என், பி. அரசாங்கம் அனுமதி வழங்காத போதிலும் தடையையும் உடைத்துக் கொண்டு மேற்கொண்ட விஜயம் தோழி. ஹெனுக்கு பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்தது.

சு. வ. வ. விஜயம் தொடர்பாக தோழி. ஹெல்யாட் பாரிய சொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் தலைவர் வட்டவெலவை அக்டோபர் 19ம் திகதி சந்தித்தார், முதலீடுகளைத் தருவிப்பது தமது கடமையாக இருப்பதால் பத்திரிகைகளில் 'கெட்ட' செய்திகள் வெளிவருவது அதற்குத் தடையாக இருக்கும் என வட்டவெல தெரிவித்தார், மறுவார்த்தைகளில் சொன்னால் சுதந்திர வர்த்தக வலயத்தில் நீடித்து வரும் தொழிலாளரின் உழைப்பைச் சுரண்டும் பகற்கொள்ளை நிலைமைகளை அனைத்துலகத் தொழிலாளி வர்க்கம் அறிந்து கொள்ளுவதையிட்டு ஆளும் வர்க்கத்துக்கு இருந்து வரும் பீதியை இத்தடை எடுத்துக் காட்டியது.

ஏகாதிபத்திய பன்னாட்டுக் கம்பனிகள் உலகம் பூராவும் மேற்கொண்டுவரும் மிலேச்ச சுரண்டலுக்கு எதிராக உலகத் தொழிலாளி வர்க்கத்தை ஒன்றிணைப்பதே தமது உலகச் சுற்றுலாவின் நோக்கமாகும் என தோழி. ஹெல்யாட் தம்முடன் கலந்துரையடிய சு, வ, வ, தொழிலாளர்களிடம் தெரிவித்தார், ஹெல்யாட்டின் வருகையை அறிந்து பல நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் அங்கு கூடினர். உலகச் சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தினை உலகத் தொழிலாளர்களிடையே முன்னெடுத்துச் செல்லும் போராட்டத்தின் ஒரு பாகமாகவே தாம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அவர்குறிப்பிட்டார்.

சு. வ. வ. இடம் பெறும் பாணியில் சுரண்டல் தொடருமானால்2000 ஆண்டளவில் எம்மிடமிருந்துவேலைவாங்க முதலாளிகள் ஏப்பிரகாம் லிங்கன் காலத்துக்கு முன்னைய கசையடி முறையைப் பயன்படுத்தினாலும், அது ஆச்சரியம் அல்ல என ஒரு தொழிலாளி தோழி. ஹெல்யாட்டிடம் குறிப்பிட்டார்.

பா. கொ. பொ. ஆ. தொழிற் திணைக்களம், தொழிற் சங்கத் தலைவர்கள் அனைவரும் லஞ்சத்துக்கு அடிபணிந்து போயுள்ளதாயும் நாளுக்கு நாள் இப்பிரச்சினை உக்கிரம் அடைவதாயும் அவர்கள் தெரிவித்தனர். சு. வ,வ. சேர்ந்த பல்வேறு தொழிற்சாலைகளிலும் 34 தொழிலாளர்கள் சோசலிச வேலைத் திட்டம் பற்றி கலந்துரையாட தமது முகவரிகளை வழங்கினர்.

சோசலிச புரட்சியின் உலக கட்சியைக் கட்டி எழுப்பு!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர்:..........................................................

முகவரி:.......................................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற இந்தப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,

கொழும்பு - 10,

சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?



விலை. 25-00

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் சோசலிஸ்ட் வேட்பாளர் ஹெலன் ஹெல்யாட்டின் உலக சுற்றுலா

# அவுஸ்திரேலிய விஜயத்துடன் ஹெல்யாட்டின் உலக சுற்றுலா நிறைவு!

உலகச் சுற்றுலாவின் இறுதிக் கட்டமாக இலங்கையில் இருந்து அவுஸ்திரேலிய விஜயத்தை மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் சோசலிச வேட்பாளர் ஹெலன் ஹெல்யாட் அங்கு சிட்னி, மெல்பேர்ண், பிரிஸ்பேர்ண் நகரங்களில் முக்கிய மூன்று கூட்டங்களில் உரை நிகழ்த்தினார், இக் கூட்டங்களை அவுஸ்திரேலிய ட்ரொட்ஸ்கிசக் கட்சியான சோசலிச லேபர் லீக் ஏற்பாடு செய்திருந்தது,

அக்டோபர் 23ம் திகதி மெல்பேர்ணில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கிரீக், இத்தாலி, ஜேர்மன், யூகோசலாவியா, தாய்லாந்து, நியூசிலாந்து, துருக்கி, பேரு, சில்லி, சூடான், ரூஷ்யா முதலான நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்;

அக்டோபர் 25ம் திகதி சிட்னி நகரில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கு கொள்ளும் பொருட்டு தொழிலாளர்களும், இளைஞர்களும் கொகொப்ஸ் ஹாபர், லித்கோவ். நியூகாசல், வொலொங்கொங் முதலான தூர இடங்களில் இருந்தும் வருகை தந்திருந்தது குறிப்பிடத்தக்கது, கூட்டத்தில் 150க்கும் அதிகமானோர் பங்கு பற்றினர். இவர்களில் தபால், புகையிரத ஊழியர்கள், தாதிகள், ஆதிவாசிகள் என்போர் அடங்குவர்.

சோசலிச லேபர் லீக்கின் உதவிச் செயலாளர் லின்டமரினன் போமின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சோ. லே. லீ. தேசிய செயலாளர் நீக் பீம்ஸ் ஆரம்ப உரை நிகழ்த்தினார். ஹெலன் ஹெல்யாட் இறுதியாக உரை நிகழ்த்தினார்.

கூட்டத்தின் இறுதியில் பல்வேறு அரசியல் பிரச்சினைகளைப் பற்றி எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஹெல்யாட் பதில் அளித்துப் பேசினார். பிரிஸ்பேனில் ஆதிவாசிகள் மத்தியில் உரை நிகழ்த்திய ஹெல்யாட்டுக்குப் பலத்த ஆதரவு கிடைத்தது. இந்த ஆதிவாசிகள் இன்று அவுஸ்திரேலியாவில் இனவாத ஒடுக்கு முறைக்குப் பலியாகி வரும் ஒரு மக்கட் குழுவினர் ஆவர்.

இக்கூட்டங்களைத் தொடர்ந்து ஹெல்யாட் டீயூம் தபால் நிலைய தபால் தொழிலாளர்கள், மின் சார கார்-புகையிரத வேலைத் தளம் போன்றவற்றுக்கு விஜயம் மேற்கொண்டதோடு தொழிலாளர்கள் மத்தியிலும் உரை நிகழ்த்தினார்.




சிட்னி நகர் கூட்டத்தில் ஹெல்யாட் உரை நிகழ்த்துகின்றார்.

அவுஸ்திரேலியாவில் இடம் பெற்ற வெற்றிகரமான சுற்றுலாவின் பின்னர் அமெரிக்கா திரும்பிய ஹெலன் ஹெல்யாட் வேர்க்கஸ் லீக் தேர்தல் பிரச்சாரத்தின் உச்சக் கட்டமாக நவம்பர் 2ம் திகதி டெட்ரொய்ட் கூட்டத்தில் உரை நிகழ்த்த இருந்தார். உலக முதலாளித்துவம் 20பதாம் நூற்றாண்டின் இரண்டாவது மாபெரும் பொருளாதாரப் பேரழிவினுள் தலை மூழ்கி வரும் நிலையில் தொழிலாளி வர்க்கத்தினை சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டும் போராட்டத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஈடுபட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் மத்தியில் இந்த உலக சுற்றுலாவில் ஈடுபட்ட ஹெலன் ஹெல்யாட் இந்த அரசியல் முன்நோக்கினை முன்னெடுத்தார்.

பிரித்தானியா, ஜேர்மன். இலங்கை, அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு அமெரிக்கா திரும்பிய ஹெல்யாட், ஏகாதிபத்தியத்தினைத் தூக்கி வீசி உலக சோசலிசப் புரட்சிக்காக அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தை அணிதிரட்டும் போராட்டத்தை நடைமுறையில் முன்னெடுத்துள்ளார்.

## கண்டி:

# 'அமெரிக்காவில் வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது சிறைச்சாலை கைத்தொழிலே'

''அமெரிக்காவில் வேகமாக வளர்ச்சிகாணும் கைத்தொழில், சிறைச்சாலை அமைப்பாகும். கலிபோர்ணியா மாநிலத்தில் மட்டும் ஐரோப்பாவில் எந்தவொரு நாட்டிலும் உள்ளதைக் காட்டிலும் கூடுதலான கைதிகள்— அதாவது ஒரு இலட்சம் கைதிகள் உள்ளனர்.''

கண்டியில் அக்டோபர் 14ம் திகதி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு உறுப்பினர் தோழர். ஆனந்த தவுலகல தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தோழி. ஹெலன் ஹெல்யாட் இவ்வாறு குறிப்பிட்டார்.

கூட்டத்தின் முடிவில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது கேட்கப்பட்ட ''சோசலிசத்தை கட்டி எழுப்புவதில் தொழிலாளி வர்க்கத்தை அணிதிரட்டுவதில் வேர்க்கஸ் லீக் எவ்வளவு தூரம் பலம் பெற்றுள்ளது?' என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் ஹெல்யாட் குறிப்பிட்டதாவது;

''அமெரிக்கத் தொழிலாளர்களின் அபிலாசைகளைப் பேணக்கூடிய ஒரே வேலைத் திட்டத்தினை நாம் மட்டுமே கொண்டுள்ளதால் கட்சி மிகவும் பலம் வாய்ந்தது... நாம் தொழிற் சங்கத்தின் அரசியல் பிரிவு அல்ல. வேர்க்கஸ் லீக், அமெரிக்காவின் ட்ரொட்ஸ்கிசக் கட்சி. 1940 பதுகளில் அமெரிக்க ஆளும் வர்க்கத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் நாம் நான்காம் அகிலத்தின் அங்கத்தவராவது தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வேர்க்கஸ் லீக், நான்காம் அகிலத்துடன் தோழமை பூண்டுள்ளது. கட்சி, தேர்தலை முடிந்த மட்டும் தொழிலாளர், இளைஞர்களை நெருங்குவதற்கான ஒரு வாகனமாகவே கொள்கின்றது.'' என்றார்.

நான்காம் அகிலம் நிறுவப்பட்டதன் பின்னர் உலக சோசலிசத்துக்காக அது நடைமுறையில் செய்தது என்ன? என்ற கேள்விக்கு தோழி. ஹெல்யாட்டின் அழைப்பின் பேரில் பு. க. க. செயலாளர் விஜே டயஸ் பதிலளித்தார். நான்காம் அகிலத்தின் ஸ்தாபிதம் அதன் வளர்ச்சி மூலம் சகல வகையறாக்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராக ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகளை பேணிக் காக்க நான்காம் அகிலம் தொடுத்த ஈவிரக்கமற்ற போராட்டத்தினை அவர் வரலாற்று ரீதியில் விளக்கினார்.



கண்டி பொதுக் கூட்டத்துக்கு வருகை தந்தோரில் ஒரு பகுதியினர்.

கூட்டத்திற்கு வருகை தந்த 24 தொழிலாளர்களும், இளைஞர்களும் பு, க, க. வுடன் கலந்துரையாடும் பொருட்டு தமது முகவரிகளை வழங்கினர், மண்டபத்தில் ரூ. 450 பெறுமதியான பு. க. க. பிரசுரங்கள் விற்பனையாகின,

# துரோகத் தலைமைகளின் கைகோர்ப்புகளால் இனவாத யுத்தம் உக்கிரம்

நவம்பர் முற்பகுதியில் யூ. என். பி. இனவாதப் படைகள் அப்பாறை மாவட்டத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 155பேர் கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் 108 பேர் விடுதலை செய்யப்பட எஞ்சியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. இனவெறித் தாக்குதல்களுக்குப் பேர்போன திருக்கோவில் முகாமைச் சேர்ந்த அதிரடிப் படையினர் சின்னத்தோட்டம் பகுதியில் நடாத்திய இத் தேடுதலில் 95 பேரையும், அக்கரைப்பற்று சந்தைப் பகுதியில் 60 பேரையும் கைது செய்துள்ளனர், இவர்களில் 47 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்,

அக்டோபர் நடுப்பகுதியில் வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், சண்ணகிபுரம், பலாச்சோலை, காக்காச்சிவட்டை ஆகிய இடங்களில் ஆயுதப் படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைது செய்யப்பட்டு இன்னமும் வீடு திரும்பாத 33 இளைஞர்களின் தலைவிதியையிட்டு உற்றார் உறவினர் கலக்கம் அடைந்துள்ளனர், காக்காச்சி வட்டைப் பகுதியில் அக்டோபர் 23ல் கைது செய்யப்பட்டு பின்னர் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்ட பன்னிருவரின் நிலைமைதான் இவர்களுக்கும் ஏற்படுமோ எனற அச்சமே இக்கலக்கத்துக்கான காரணமாகும்.

இக் காக்காச்சிவட்டை இவ்வாண்டின் தொடக்கத்தில் ஆயுதப்படைகளால் கொலை செய்யப்பட்டு சுட்டுப் பொசுக்கப்பட்ட 100க்கும் அதிகமானோரின் கிராமமான கொக்கட்டிச்சோலைக்கு 6 மைலுக்கு அப்பாலுள்ளது. இக் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்திய ஆணைக்குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இராணுவ கேர்ணலைத் தவிர மற்றும் சகல ஆயுதப்படைக் கொலையாளிகளையும் இராணுவ நீதிமன்றம் சமீபத்தில் விடுதலை செய்துள்ளது. அத்தோடு இந்த கேர்ணலுக்கு தண்டனை வழங்குவதையும் இராணுவ நீதிமன்றம் ஒத்திப் போட்டுள்ளது.

### காணாமற் போனோர்

1990ஜூனில் பிரேமதாச அரசாங்கத்தின் தமிழ் இனப்படுகொலை யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 4000 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் 'காணாமற்' போயுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் இளைஞர்கள்.

இதற்கிடையே தற்சமயம் இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ, நா, மனித உரிமைகள் பற்றிய அமைப்புடன் கலந்துரையாடிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பூசா, பல்லேகலை, பெலவத்த முதலான தடுப்பு முகாம்களில் உள்ள 5943 சிறைக் கைதிகள் சமர்ப்பித்துள்ள அடிப்படை மனித உரிமைகள் பற்றிய முறைப்பாட்டிற்கு அவசியமான சத்தியக்கடதாசியை தயார் செய்யும்படி உயர்நீதிமன்றம் தமக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டில் இந்த ஐ, நா, மனித உரிமைகள் அமைப்பு இலங்கையில் காணாமற் போனோரின் எண்ணிக்கை 60,000 எனக் குறிப்பிட்டிருந்தது,

இப்புள்ளி விபரங்கள் பிரேமதாச அரசாங்கம், வடக்கு-கிழக்கிலும், இலங்கையின் தென் மாகாணங்களிலும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான — சிறப்பாக இளைஞர்களின்- இரத்த வெள்ளத்தில் நீச்சலடித்த வண்ணம் ஆட்சியில் இருந்து வருகின்றது என்பதைத் தெளிவு படுத்துகின்றது, இந்

(10ம் பக்கம் பார்க்க)

# மானிப்பாய் அந்தோனியார் ஆலய அகதிகள் முகாம்: 'சீலையால் அடைப்புக்கட்டி ஜீவிக்கிறோம்'

யூ. என். பி. அரசாங்கத்தின இனவாத ஆயுதப்படைகள் மாதகல், இளவாலைப் பகுதிகளில் மேற்கொண்ட 'பூமியதிர்ச்சி' இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக வசித்து வந்த வீடுவாசல்களை இழந்து, அகதிகளாக மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் தங்கியுள்ள தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுடன் ஆகஸ்ட் நடுப்பகுதியில் 'தொழிலாளர் பாதை' நிருபர் நடாத்திய பேட்டி இங்கு பிரசுரமாகின்றது. ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச அரசாங்கத்தின் காட்டுமிராண்டி இனவாத யுத்தத்தின் அழிவுகளுக்கு ஒரு புறமுறமும், தேசியவாதத்தின வங்குரோத்தினால் ஏகாதிபத்தியத்திற்கு கைநீட்டி வரும் விடுதலைப் புலிகள் தலைமையின் பிற்போக்கு அரசியல் வேலைத்திட்டங்கள் மறுபுறமும் சிருஷ்டிக்கும் அவலங்களுக்குள் ஒடுக்கப்படும் இம்மக்கட் பிரிவினர் சிக்குண்டுள்ளனர்.

★ மு. நாகமுத்து (வயது 45), ''மாதகல், கீரிமலை பகுதிகளை இராணுவம் தாக்கியதைத் தொடர்ந்து நாம் இங்கு வந்தோம், நான் சீவல் தொழிலாளி. கீரிமலை தூண்டில் கிராமத்தில் வசித்து வந்தோம். 1989ல் எமது கிராமத்தில் இருந்து வெளியேறினோம். இளவாலை பாத்திமா ஆலயத்தில் அகதிகளாக இருந்து வந்தோம். 1971ம் ஆண்டில் எனது 4பரப்பு காணியில் வீடு கட்டினேள். இக் காணியில் வெண்காயம், மிளகாய், மரக்கறி செய்கை பண்ணிவந்தேன். யுத்தத்தினால் இவை எல்லாம் நாசமாக்கப்பட்டு விட்டது. இதனால் ரூ. 65000/- மட்டில் நஷ்டம்.

''எனக்கு 5 பிள்ளைகள். இருவர் க. பொ. த, (சாதாரணம்) வகுப்பில் படிக்கிறார்கள். பாடசாலை ஒழுங்காக நடைபெறுவதில்லை. இவர்கள் படித்து வந்த கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாசாலை இப்போது இரண்டாவது தடவையாக இடம் பெயர்ந்துள்ளது. வகுப்புக்கள் மாலை நேரத்தில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடைபெறுகின்றது.''

இரவில் நாம் தூங்குவது இந்த மரத்தின் அடியில் என மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் உள்ள மரங்களைக் காட்டிய இந்த தொழிலாளி, பெண்கள் ஆலயத்துள் தங்குகிறார்கள் எனக் கூறினார், இங்கு வந்து ஒரு மாதமாகி விட்டதாகவும் தாம் வசித்து வந்த பிராந்தியம் முழுவனே இராணுவத்தின் பிடிக்குள் உள்ளதாகவும் நாகமுத்து மேலும் குறிப்பிட்டார்.

★ மரியாம்பிள்ளை:''நான் இளவாலை பாத்திமா கோவிலடியில் வசித்து வந்தேன். மேசன் தொழில் செய்து வந்த எனக்கு காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை மூடப்பட்டு, யாழ்ப்பாணத்துக்கு சீமெந்து கொணர்வது தடைசெய்யப்பட்ட பின்னர் வேலை இல்லாமல் போயிற்று. எனக்கு 5 குழந்தைகள். கடந்த 22 நாட்களாக (பேட்டி ஆகஸ்ட் 20ல் நடைபெற்றது) எனக்குச் சரியான சாப்பாடு கிடையாது. இந்த மாதத்துக்கென எமக்கு 1 கிலோ கடலைப் பருப்பும், 4 கிலோ நாட்டரிசியும், 5 கிலோ கோறா அரிசியும் தந்தார்கள். எனது குழந்தைகளுக்கு நான் தேநீர் கொடுப்பகில்லை.'' எனக் கண்ணீர் சிந்திய வண்ணம் குறிப்பிட்டார்.

மரியாம்பிள்ளை 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் மேலும் கூறியதாவது, ''...... எனது 1 1/2 வயதுப் பிள்ளைக்கு சுகமில்லை. இங்கு மருந்து தந்தார்கள். ஆனால் இவ்வளவு சனத்துக்குள் சத்தம், சாவடிக்குள் சுகமில்லாத பிள்ளையை வைத்திருப்பது எப்படி? ஆதலால் பக்கத்து வீட்டில் இருக்கும்படி கூறிவிட்டு வந்து இருக்கின்றேன்.'' என்றார்.

வேலையற்ற அவல நிலையை விஸ்தரிக்கையில் அவர் மேலும் கூறியதாவது; ''நான் கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் மேசன் தொழிலாளியாக வேலை செய்து வந்தேன். 1982ல் எம்மை எல்லாம் வெளியில் தள்ளிவிட்டு அதையும் மூடிவிட்டார்கள். பின்னர் நான் கூலித் தொழிலாளியாக வேலை செய்து வந்தேன்.'' என்றார்.

சளிச் சுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்த இந்தத் தொழிலாளி 'சமைத்துச் சாப்பிட இடமோ, விறகோ, உலர் நிவாரணப் பொருளோ இல்லாமல் இருமல், காய்ச்சல், எப்படி மாறும்? என்றும் பரிதாபமான விதத்தில் கேள்வி எழுப்பினார்.

★ யோகநாதன் (மீன்பிடித் தொழிலாளி): ''இந்த மரங்களுக்குக் கீழ் சீலையால் அடைப்புக் கட்டி ஜீவித்து வருகின்றோம். நான் மீன்பிடித்தொழிலாளி. இந்த இராணுவப் பயங்கரங்களால் கடலுக்குத் தொழிலுக்கு நிம்மதியாகப் போக முடியாது. இருந்தாலும் கூப்பனுடன் ஜீவிக்க முடியுமா? தூரக் கடலுக்குப் போனால் உயிருக்கு உலை. கட்டுமரத்தில் தொழில் செய்து வந்தேன். எனது கடற்தொழில் சொத்துக்கள் எல்லாம் கட்டுமரத்தில். 65 ஆயிரம் பெறுமதியானவற்றை அப்படியே விட்டுவிட்டு வந்து விட்டோம். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாது.'' என்று யோகநாதன் கையை விரித்தார்.

# முதலாளித்துவ பாதையில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சீன ஸ்டாலினிசத் தலைவர்களும், இந்த 14வது காங்கிரசும் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளன: 'சோசலிசத்துக்கும்தொழிலாளி வர்க்கத்துக்கும் இனி எந்த விதமான தொடர்பும் கிடையாது, உற்பத்திச் சக்திகளை சமூகமயமாக்குவதிலோ அல்லது வர்க்க சமுதாயத்தை நிர்மூலமாக்குவதிலோ தொழிலாளிவர்க்கத்துக்கு எதுவித தொடர்பும் கிடையாது. இந்தப் பிற்போக்கு அதிகாரத்துவங்களின்படி இன்று அவசியப்படுவது 'பொது செழிப்பு' மட்டுமே. 'செல்வப் பங்கீட்டில் துருவப்படுத்தலைத் தவிர்க்க'' டெங்கின் சீர்திருத்தங்கள் தொழிற்பட்டு வருவதாகக் கூறுவது ஒரு பெரும் மோசடியாகும். புதியதொழில் துணிவு முதலாளி வர்க்கத்துக்கும் வசதி வாய்ப்புக்கள் படைத்த அதிகாரத்துவத்துக்கும், தொழிலையும் உணவையும் தேடி அலையும் இலட்சோப இலட்சம் தொழிலாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் இடையேயான இடைவெளி இன்றுபோல் என்றுமே ஆதாளபாதாளமாய் இருந்ததில்லை.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் அதிகார சபையான அரசியல் குழுவின் நிலையியற் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்ட எழுவர், சீன பொருளாதாரத்தின் முதலாளித்துவமயமாக்கத்தினை விரிவுபடுத்தும் அதிகாரத்துவத்தின் வேலைத்திட்டத்துடனும், அரசியல் எதிரிகளுக்கு எதிரான அடக்கு முறையுடனும் நெருக்கமாக இணைந்தவர்கள் ஆவர்.

இந்தக் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களுள் பிரதமர் லீ பெங்கும் கட்சித் தலைவர் ஜியாங் செமினும் அடங்குவர். பிரதமர் பெங் 1989 ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது இரத்தம் தோய்ந்த ஆயுதப்படைகளின் வேட்டையை நெறிப்படுத்தியதன் மூலம் மக்களின் பெரும் வெறுப்புக்கு ஆளானவர். அடுத்தவர் மா ஜி ஷங்காய் மேயர் சூ றொஞ்சி. மேற்கத்தைய பத்திரிகைகள் இவரை 'சீன கொர்பச்சேவ்' என வர்ணிக்கும் அளவுக்கு முதலாளித்துவத்துக்கு ஆதரவு காட்டுபவர். மத்திய இராணுவ ஆணைக்குழுவின் உப தலைவரான ஜெனரால் லியூ குவாகிங்கும் இந்தக்கமிட்டியில் இடம்பிடித்துக் கொண்டுள்ளார். 1970 பதுகளில் கலாச்சாரப் புரட்சி முடிவுற்றதன் பின்னர் ஒரு உயர் இராணுவ அதிகாரி இந்த உயர் அரசியல் பீடத்துள் கொணரப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இக் கட்சிக் காங்கிரஸ் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் (PLA) ஏழு இராணுவ பிராந்தியங்களை அழித்துவிட்டு. மத்திய இராணுவ ஆணைக் குழுவின் கீழ் கொணரும் திட்டத்தையும் அங்கீகரித்தது,

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
24 MAR 1993
கிடைக்கப்பெற்றது
நூலகர்.

## நோர்வூட்:

# 'தோட்டத்தில் இ. தொ. கா, தே. தோ. தொ. ச. இருந்தும் குரல் கொடுக்க முன்வரவில்லை'

மரக்கறித் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த 15 தொழிலாளர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, தலா ரூபா.300/- பிணையில் விடுதலை செய்யப்பட்ட சம்பவம், நோர்வூட் கீழ்க்கணக்குத் தோட்டத்தில் நடைபெற்றுள்ளது. ''விவசாயம் செய்யும் காணிகளில் இருந்து எங்களை விரட்டி அடிக்கும் நோக்கத்துடன் தோட்ட சுப்பிரின்டன் ஆனந்த மடகலவின் உத்தரவின் பேரிலேயே நோரார்வூட் பொலிசார் எங்களைக் கைது செய்தனர்'' என தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் தெரிவித்தனர்.

''செப்டம்பர் 27ம் திகதி நாம் வேலை செய்து கொண்டிருந்த வேளையில் தோட்டத்தை சுற்றி வளைத்த பொலிசார் எம்மை கைது செய்தனர் முதலில் எங்களை நோர்வூட் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றார்கள். எங்களுக்கு எதுவித உணவும் வழங்கப்படவில்லை. பின்பு அட்டனுக்கு கொண்டு சென்று மறியலில் வைத்தார்கள். மறியலில் இருந்த போது நாம் சிறைக் காவலாளிகளால் பலமாகத் தாக்கப்பட்டோம். 'தமிழனுக்கு என்னடா நிலம்' என்று கேட்டுத் தாக்கினார்கள்.

''எங்கள் தோட்டத்தில் இ.தொ.கா., தே.தோ.தொ.ச. N.U.W) ஆகியன இருக்கின்றன. எமக்காக குரல் கொடுக்க இவை எவையும் முன்வரவில்லை. தொழிலாளர்கள் காசு கட்டியே எங்களைப் பிணை எடுத்தார்கள். எம்மை விடுதலை செய்ய முயற்சிப்பதாக கூறிச் சென்ற இ. தொ. கா. உப-தலைவர் ராயூ அடுத்த நாள் அந்தப் பக்கம் வரவில்லை'' எனவும் இத்தொழிலாளர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

தரிசு நிலமாகக் கிடந்த காணியை திருத்தி 1972ல் இருந்து விவசாயம் செய்யத் தொடங்கியதாக குறிப்பிட்ட இத்தொழிலாளர்கள் கடந்த வருடம் இரண்டு போகங்கள் மரக்கறி செய்து ரூபா.15000/- வருமானம் பெற்றதாக கூறினர். இப் பயிர்களை தோட்ட நிர்வாகம் அழித்ததன் மூலம் பல ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கைது செய்யப்பட்ட தொழிலாளர்களான ஏ. உலகநாதன், பக்கிரி முத்தையா, எம்.லட்சபதி, சே-குமாரவேல், கிருஷ்ணசாமி, செல்வரத்தினம், விஜயகுமார், ஜெயராமன், கறுப்பையா, ராயர், குழந்தைவேல், அருளப்பன், பாக்கியநாதன், கனகரத்தினம், செல்வரத்தினம் ஆகியோர் தெரிவித்தனர்.

900 ஏக்கர் கொண்ட இத் தோட்டத்தில் 500 ஏக்கரில் மட்டுமே தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. ஏனைய நிலம் தரிசாகக் கிடக்கின்றது. பெரிய வீடுகள் கட்ட காணி வழங்கும் நிர்வாகம் தொழிலாளருக்கு விவசாயத்துக்கு காணி வழங்க மறுக்கின்றது. தோட்டம் தனியார் கம்பனியால் கையேற்கப்பட்ட பின்னர் இந்த காணிகளில் இருந்து தொழிலாளர்களை விரட்டும் நடவடிக்கைகள் உக்கிரம் கண்டுள்ளதாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

## நோர்வூட் கீழ்க்கணக்கு:

# 17 தொழிலாளருக்கு தொழில் வழங்க மறுப்பு

நோர்வூட் தோட்டம் கீழ்க்கணக்கைச் சேர்ந்த 17 தொழிலாளர்களுக்கு தொழில் வழங்க நிர்வாகம் தொடர்ந்து மறுத்து வருகின்றது. 1983ல் வேலை நீக்கம் செய்யப்பட்ட இத் தொழிலாளர்கள் நிர்வாகத்தின் தாக்குதலினால் தமது தொழில் உரிமைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை விபரிக்கையில் கூறியதாவது:-

''1983ல் தோட்டத்தில் நிலவிய வரட்சி காரணமாகத் தொழில் கிடைக்கவில்லை. இதனால் தொழில் தேடி கொழும்புக்குச் சென்றோம். 1983 ஜூலை கலவரத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டும் தோட்டத்துக்கு திரும்ப ஒருமாதம் தாமதம் ஏற்பட்டது. இதனால் நிர்வாகம் எங்கள் 17 பேரையும் வேலை நீக்கம் செய்தது.

''நாம் இ.தொ.க., தேசிய தொழிலாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம். ஆனால் கடந்த 10 வருடங்களாக இத் தலைமைகளை மீண்டும் வேலை பெற்றுத் தரும்படி நாம் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் இவர்களோ எங்களைக் கவனிப்பதாயில்லை. இவர்கள் தமது வசதி வாய்ப்புகளைப் பெருக்குவதில் தான் அக்கறையாய் இருக்கிறார்கள். எங்கள் பிரச்சினைகளில் தலையிடுவதில்லை. கம்பனி எடுத்தபிறகு வேலைபெற்றுத் தருகின்றோம் என்றார்கள். கம்பனி எடுத்த பிறகு வேலையை வழங்குமாறு கேட்டபொழுது தோட்டத்தில் ஆட்கள் கூடிவிட்டது.'' எனக்கூறுகின்றார்கள். இதன் மூலம் தனியார் மயமாக்கத்தை வெளிவெளியாக ஆதரிக்கும் இ.தொ.கா. தலைமைக்கும் சரீ போலி எதிர்ப்புகாட்டும் தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி தலைமைக்கும் சரி தொழிலாளர்களின் தொழில் உரிமையை காப்பாற்ற எதுவித வேலைத்திட்டமும் கிடையாது என்பதை நிரூபித்துள்ளார்கள்.

# துரோகத் தலைமைகளின்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தப் படுகொடூரமான இரத்தக் களரிகளின் உண்மையை மூடி மறைக்கும் பொருட்டு யூ. என். பி. அரசாங்கம் தொடர்ந்தும் இனவாத ஆத்திர மூட்டல்களில் ஈடுபட்டு வருகின்றது. சுருங்கச் சொன்னால் இந்நாட்டு ஆளும் வர்க்கம் கடந்த 12 வருட ஆட்சிக் காலத்தில் நாட்டின் ஜனத் தொகையில் நூற்றுக்கு 2% மானோரைக் கொலை செய்த ஆளும்வர்க்கமாகும்.

இந்தப் பயங்கர படுகொலைகளுடன் இலட்சக் கணக்கானோரின் தொழில் வெட்டு, பட்டினி, பஞ்ச நிலைமைகளையும் சேர்த்துப் பார்க்குமிடத்து ஏகாதிபத்தியத்தினதும், ஏகாதிபத்திய கைக்கூலி தேசிய முதலாளி வர்க்கத்தினதும் காட்டுமிராண்டி ஆட்சியின் தன்மையை நன்கு புரிந்து சொள்ள முடியும்.

இந்த இரத்தக் களரி இனவாத யுத்தங்களுக்கு ஆதரவாக வடக்குக்—கிழக்கில் இருந்து இனவாத இராணுவத்தை அகற்றுவதையோ அல்லது தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதையோ அடியோடு மறுக்கும் சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ துரோகிகள் சகல வகையான இனவாத வெறியர்களுடன் சேர்ந்து 'கைகோர்த்து' நிற்கும் 'மனித சங்கிலி' போராட்டத்தின் வர்க்கத் தன்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

வடக்கு—கிழக்கில் முழு அளவிலான இனப் படுகொலை யுத்தங்களுக்கு தலைமை தாங்கிய டென்சில் கொப்பேகடுவ — விமலரத்ன போன்ற இராணுவ தளபதிகள் ஊர்காவற்துறையில் கொலை செய்யப்பட்ட போது அரசாங்கம் முழு அளவிலான தேசிய துக்க தினம் கொண்டாடத் தவறிவிட்டதாக இத் துரோகத் தலைமைகள் குரல் எழுப்பினர். இன்று — மூன்று மாதங்களின் பின்னர் — நவம்பர் 8–9ம் திகதிகளை சோகதினமாக அனுஷ்டிக்கும்படி சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சிகள் கோரியுள்ள நிலைமையிமேயே இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் வாழும் பிராந்தியத்தில் (வவுனியாவில்) ஒடுக்குமுறை தளபதியின் நினைவுச் சிலையைத் திறந்துவைக்க யூ.என், பி. அரசாங்கம் சக்தி பெற்றுள்ளது. சி, ல, சு. க, ம, ஐ. மு, போன்ற இனவாதக் கட்சிகளுடன் சேர்ந்து வடக்கு-கிழக்கு யுத்தத்துடன் சம்பந்தப்படாத அவசரகாலச் சட்டங்களை நீக்கும்படி யூ.என். பி. அரசாங்கத்தைக் கோரும் மறியல், கூட்டங்களை நடாத்தப் போவதாக ராஜா கொலூரே-அத்தாவுட செனவிரத்ன - வாசுதேவ நாணயக்கார அறிவித்துள்ளனர்,

### விடுதலை

ஆளும் வர்க்கத்தின் காட்டுமிராண்டி யுத்தத்துடன் தமது கைகால்களைப் பிணைத்துக் கொண்டுள்ள எந்தவொரு நாட்டினதும் தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களினால் விடுதலையை ஈட்டிக் கொள்ளவே முடியாது. இந்த வர்க்க நிலைப்பாட்டினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இடைவிடாது கடைப்பிடித்ததோடு, வர்க்கக் கூட்டு அரசியலைத் தோற்கடிக்கத் தொடர்ச்சியாகப் போராடியும் வந்துள்ளது.

தொழிலாளி வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களின் தலைவன் என்ற முறையில் அரச ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ள மக்கட் பகுதியினரின் கைவிலங்குகளை உடைத்தெறிய சுயாதீனமான போராட்டத்தில் ஈடுபடாத வரையில் ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ள தமிழ் தேசிய இனத்தினை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் போன்ற பிற்போக்கு முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களின் பிடியில் இருந்து விடுதலை செய்யவே முடியாது.

இத்துரோகிகளை தொழிலாளர் இயக்கத்தில் இருந்து வெளியேற்றி, பிரேமதாச அரசாங்கம் தலைமையிலான ஏகாதிபத்திய சார்பு ஆளும் வர்க்கம் வடக்கு—கிழக்கிலும் தென் மாகாணங்களிலும் நடாத்திவரும் காட்டு மிராண்டி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும், தமிழ் ஈழம் இலங்கை சோசலிச குடியரசை நிறுவவும் தொழிலாளர்கள் போராட வேண்டும். இலங்கையுள் இப் போராட்டத்தினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக்கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே முன்னெடுக்கின்றது.

## மறியல் போராட்டம்

★ விலைவாசியைக் குறை!
★ இலவசக் கல்வி உரிமையை காப்பாற்று!
★ இனவாத யுத்தத்தை நிறுத்து:
★ கிராமப்புற படுகொலைகளை நிறுத்து!
சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!
★ யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று!
தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தைக் கட்டியெழுப்பு!

**நவம்பர் 27 மாலை4மணி**
**கோட்டைப் புகையிரத நிலைய முன்றலில்**

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இளம் சோசலிஸ்டுக்கள்**

கொழும்பு - 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டுவெளியிடப்பட்டது.